Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா

சுடர் :35 கதிர் :18 கார்த்திகை 28ஆம் நாள் சனிக்கிழமை 14 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

021 222 5000



டெங்குவா?
அழையுங்கள்!

விரிவு பக்.14



# புத்துயிர் பெறும் புலிகள்!

புலனாய்வுப் பிரிவுக்கு கமால் குணரட்ண யாழ்ப்பாணத்தில் வைத்து 'அலேட்'

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 14**

தமிழீழ விடுதலைப் புலிகள் புத்துயிர் பெற முயலும் அதேவேளை தங்கள் மதத்தை பிழையாக விளங்கிக்கொண்டுள்ள தீவிரவாத இளைஞர் குழுவொன்று நாட்டின் அமைதி நிலையைக் குழப்புவதற்கு முயல்கின்றது. இவ்வாறான சக்திகளை கண்காணித்து நாட்டைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு புலனாய்வு அமைப்புகளுக்குரியது. இவ்வாறு பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார். 23

## பளை விபத்தில் இருவர் சாவு!

*உயிரிழந்தவர்களில் ஒருவருக்கு திருமணமாகி 7 மாதங்களே . .*



23

## வடக்குக்கு மகிந்த வருகை

வவுனியா, டிசெ. 14

வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ள அறநெறிப் பாடசாலைகளின் தேசிய நிகழ்வுக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ச வவுனியா மாவட்டத்துக்கு எதிர்வ 23

வடக்கு ஆளுநர்

## இன்னும் 2 வாரத்தில் நியமனம்

*கோத்தா தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 14

வடக்கு மாகாண ஆளுநர் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் நியமிக்கப்படுவார் என்று ஜனாதிபதி கோத்தா 23

**முச்சந்தி முரளி**



"இடியப்ப சிக்கலை தீர்க்கிறதை விட வடக்குக்கு ஆளுநரை போடுறது பெரும் சிக்கலாவெல்லோ கிடக்கு...!"

யாழ். மாவட்ட செயலருக்கு

## இடமாற்றம்?

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ந.வேதநாயகனை, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் 06

## உழவு இயந்திரத்தினுள் நசியுண்டு ஒருவர் சாவு

கொடிகாமம், டிசெ. 14

நாவற்குழி தெற்குப் பகுதியில் உழவியந்திரத்தினுள் அகப்பட்டு குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று பி.ப. 4.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. நான்கு பிள்ளைகளின் தந்தையான காந்தி ஜெயந்தீபன் (வயது-48) என்பவரே உயிரிழந்துள்ளார். 23

## அடுத்த 'டார்கெட்' யாழ்ப்பாணம்தான்!

நித்யானந்தா அதிரடி

கொழும்பு, டிசெ. 14

தனது அடுத்த இலக்கு இலங்கையில் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் என்று நித்யானந்தா வெளிப்படையாக அறிவித் 23




## 'நிம்மதியாக இருக்க விடுங்க நித்தி'

நல்லை ஆதீனம் சுடச்சுட பதிலடி

யாழ்ப்பாணம், டிசெ. 14

இலங்கையிலுள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமே தனது அடுத்த இலக்கென சுவாமி நித்யானந்தா கூறியுள்ள நிலையில், நல்லை ஆதீன முதல்வர் அது தொடர்பில் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தெரிவித்ததாவது:

அவர் உண்மையில் அப்படி சொன்னாரா என்பதைப் பார்க்கவேண்டும். அல்லது குழப்பங்களை ஏற்படுத்த இடையில் யாரும் ஏதாவது வேலைகளை செய்கிறார்களா என்பதைப் பார்க்கவேண்டும். எங்களுக்கும் அவருக்கும் 23

பலம்வாய்ந்த நாடுகள்

## ஒரு நாடு இரு தேசம்

*கோட்பாட்டை செயற்படுத்த அழுத்தம் தரக்கூடாது என்கிறார் கோத்தாபய* 06

# இஸ்லாமிய தீவிரவாதத்தை இல்லாதொழிப்போம்!!!

படையினர் முன்பாக மஹிந்த கர்ஜிப்பு



கொழும்பு, டிசெ. 14

இஸ்லாமிய தீவிரவாதத்தை அடியோடு இல்லாதொழிக்க புலனாய்வு நடவடிக்கைகளை பலப்படுத்துவதுதான் ஒரே வழி. இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கை பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி பட்டமளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட 23

## மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 14

நாட்டின் ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இடையி 06

## விவரண படக் காட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 14
எஸ்.ஜே.வி.செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில், இலங்கையில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் பற்றிய விவரணப் படக் காட்சி இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது. தென்னிந்திய திருச்சபை யின் முன்னாள் ஆயர் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், விளக்க உரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன் நிகழ்த்தவுள்ளார். (ஓ.5)

## கருத்தாய்வரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 14
இலங்கையின் புதிய சூழலை தமிழ்த் தேசமாக எவ்வாறு எதிர்கொள்வது என்ற கருத்தாய்வரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு, இல. 250 கோயில்வீதியில் அமைந்துள்ள நல்லூர் பவன் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது. அரசியல் ஆய்வாளர் ஆ.யதீந்திரா கருத்துரை வழங்கவுள்ளார். (ஓ.5)

### யாழ். மாநகரசபையின்

# பாதீடு தோற்கடிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 14**
**யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2020ஆம் ஆண்டின் பாதீடு இரண்டாம் வாசிப்புக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அதை நிறைவேற்றுவதற்கு உறுப்பினர்கள் ஆதரவளிக்கவில்லை. எனினும், தனக்கு அளிக்கப்பட்ட மாநகரச் சட்டப்படி பாதீட்டை நிறைவேற்றுகின்றேன் என்று மேயர் சபையில் அறிவித்தார்.**



பாதீடு கடந்த மாதம் 28ஆம் திகதி சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, 16க்கு 21 என்ற அடிப்படையில் உறுப்பினர்கள் தோற்கடித்தனர்.
கடந்த 9ஆம் திகதிய முன்னறிவித்தல் மூலம் நேற்று அங்கீகாரத்துக்கு விடப்பட்டது. வாக்கெடுப்பு பகிரங்க வாக்களிப்பாக இருக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் முன்மொழிந்தார். அதை ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர் வழிமொழிந்தார்.
ஆதரவாக 19 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டன. பாதீடு மேலதிக 5 வாக்குகளால் தோல்வியுற்றது.
யாழ்ப்பாணமாநகர சபையின் 2020ஆம் ஆண்டுக்கான பாதீட்டை மாநகர சபைக் கட்டளைச் சட்டம் 215ஆம் இலக்க 'ஏ' இன் பிரகாரம் நிறைவேற்றுகின்றேன் என்று மாநகர மேயர் இ.ஆனல்ட் அறிவித்தார். (த-105,104,111)

### கூட்டமைப்பு - ஈ.பி.டி.பி.

# வாய்த் தர்க்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ்ப்பாண மாநகர சபையின் பாதீடு தொடர்பான நேற்றைய அமர்விலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களிடையே கடும் வாய்த்தர்க்கம் இடம்பெற்றது.
மாநகர சபையின் 2020ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. 2019ஆம் ஆண்டின் டிசெம்பர் மாத மாதாந்த அமர்வில் கூட்டமைப்பு சார்பு உறுப்பினர் ஒருவர் முன்னாள் மேயர் தொடர்பில் அவதூறுக் கருத்தை முன்வைத்தார் என்று ஈ.பி.டி.பியின் உறுப்பினர் தெரிவித்து அது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும் என்று கோரினார்.
தன் மீதான குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கச் சந்தர்ப்பம் வேண்டும் என்று முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராசா கோரி அதுதொடர்பில் கருத்துரைக்க முற்பட்டார்.
'நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இது பாதீடு தொடர்பான கூட்டம். அதனை இன்று ஆராய்வோம். உங்களைப்பற்றித் தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க மாதாந்தக் கூட்டத்தில் சந்தர்ப்பம் தரப்படும். அது தொடர்பான ஆதாரங்களோடு உங்கள் கருத்தைக் கூறலாம்' என்று மேயர் தெரிவித்தார்.
ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான றெமிடியஸ், இளங்கோ, டேனியன், யோகேஸ்வரி, வாசு, ஜெயந்தினி போன்றோர் தொடர்ந்தும் உரையாட முற்பட்டனர். கூட்டமைப்பின் உறுப்பினரான ப.தர்சானந், தேர்தலில் போட்டியிட்டு நிராகரிக்கப்பட்டவர்கள் சபையில் இருப்பது பற்றிப் பேசிய போது மீண்டும் சர்ச்சை ஏற்பட்டது.
'நாம் தனித்து நின்றே இந்த வாக்குகளைப் பெற்றோம். தர்சானந் புளொட் சார்பில் தனித்து நின்று இந்த வாக்கைப் பெற்றுக் காண்பிக்க முடியுமா என்று சவால்விடுகின்றேன்' என்று உறுப்பினர் றெமிடியஸ் தெரிவிக்க சர்ச்சை உருவானது.
சுமார் அரைமணித்தியாலம் சர்ச்சை நீடித்தது. நிறைவில் குறித்த விடயத்துக்குப் பதிலளிக்க மாதாந்தக் கூட்டத்தில் சந்தர்ப்பம் அளிக்கப்படும். இன்று விவாதிக்க முடியாது என்று மேயர் தெரிவித்தார். (த-105)

### வடக்கில் சட்டவிரோத மண் அகழ்வு:

# கோத்தாவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
மணல் அகழ்வுப் போக்குவரத்துகளுக்கான அனுமதிப் பத்திரம் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு மாகாணத்தில் அதிகமான மோசடிகள் இடம்பெற்று வருவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்‌ஷவுக்கு முறைப்பாடு செய்துள்ளது.
கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சித்தார்த்தன் இது குறித்து கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் பல்வேறு பகுதிகளில் தற்போது மணல் அகழ்வுகள் வேகமாக இடம்பெற்று வருவதாகவும், அவற்றில் பல சட்டவிரோதச் செயற்பாடுகளும் இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ.5,22)



### நல்லிணக்க ஆணைக்குழு

# அறிக்கையை தூசி தட்டும் மஹிந்த!

கொழும்பு, டிசெ. 14
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை மீண்டும் மேற்கொள்வது குறித்து ஆலோசித்து வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி ஹனாசிங்கருடனான சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
கடந்த 2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்‌ஷ ஜனாதிபதியாக இருந்தபோது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்திருந்தார். 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி கைச்சாத்தான போர் நிறுத்த உடன்படிக்கை ஏன் தோல்வியில் முடிவடைந்தது என்று விசாரணை செய்யுமாறு அந்த ஆணைக்குழுவுக்கு ஆணை வழங்கப்பட்டிருந்து. இதன் மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரை செய்யுமாறும் இந்த ஆணைக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆணைக்குழு 18 மாத விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் 2011ஆம் ஆண்டு நவம்பரில் தனது பரிந்துரைகளை முன்வைத்திருந்தது.
அது தொடர்பில் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மீண்டும் ஆட்சியேற்று இருக்கும் ராஜபக்‌ஷ தரப்பினர் சர்வதேச நெருக்கடிகளையும், சர்வதேசத்துக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஓ.5)

### குடியுரிமை விவகாரம்:

# இந்தியாவுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தவுள்ளதாம்

கொழும்பு, டிசெ. 14
இந்தியாவில் புதிய குடியுரிமை திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக சட்டத் திருத்தத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இது தொடர்பாக தமிழகம் சார்பில் இந்திய மத்திய அரசிடம் சுட்டிக்காட்டப்பட்டதுடன் ஈழத் தமிழ் அகதிகள் விடயத்தில் கரிசனை காட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.
இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்துவரும் இலங்கை தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க இந்திய அரசுடன் பேச்சுக்களை முன்னெடுக்கவும், இலங்கையில் அவர்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுக்கவும் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவிக்கின்றது.
இலங்கை அகதிகள் விடயத்தில் தமிழர் தரப்பின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளதென வினவப்பட்ட போதே இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
'அகதிகள் விடயத்தில் நாம் தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வருகின்றோம். இந்தியாவில் உள்ள இலங்கை தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தொடர்புபட்டுள்ளது. அகதிகள் விடயத்தில் அவர்களின் அக்கறையும் உள்ளது. இந்திய அரசும் இது குறித்து சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நாம் தொடர்ச்சியாக அவர்களிடம் முன்வைத்து வருகின்ற காரணியாகும். இன்றும் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இந்தியாவில் அகதிகளாக உள்ளனர். அவர்களை இலங்கைக்கு வரவழைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்னைய ஆட்சியின் போதும் நாம் கூறினோம். அவர்களின் முழுமையான விருப்பத்துடன் அவர்களை இங்கு வரவழைக்கும் வேலைத் திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும்' என்றார் மாவை. (ஓ.5)

## வாசிப்பு மாத நிகழ்வு

மானிப்பாய்.டிசெ.14
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக செயலர் (காணி) சு.முரளீதரன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட உதவிச் செயலர் வி.சிவராஜா, சண்டிலிப்பாய் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.(க-115)

## பரு. பிரதேச சபையில்
# நிறைவேறியது 2020க்கான பாதீடு

*பருத்தித்துறை, டிசெ.14*
*பருத்தித்துறை பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.*

வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும். சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சுர்ந்த தலா 2 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த தலா ஒரு உறுப்பினரும் வாக்களித்தனர். ஈ.பி.டிபியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் (செபமாலைசெபஸ்ரியன்) மாத்திரமே எதிராக வாக்களித்தார்.

எதிராக வாக்களித்த உறுப்பினர் தவிர அந்தக் கட்சியைச் சேர்ந்த இரு பெண் உறுப்பினர்கள் சபைக்குச் சமுகமளிக்கவில்லை. இந்தச் சபையில் மொத்த உறுப்பினர் 21 பேர் ஆவார்கள்.

வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவும் மாதாந்தக் கூட்டத்துக்குமாக சபைத் தலைவர் அ.சா.அரியகுமார் தலைமையில் சபை காலை 9 மணியளவில் கூடியது. வரவுசெலவுத் திட்டத்தை அங்கீகரித்து முன்மொழிந்து வழிமொழியுங்கள் அல்லது வாக்கெடுப்புக்கு வர வேண்டும் என்று சபைத் தலைவர் கேட்டுக்கொண்டபோதுதிட்டத்தை ஆதரித்து முன்மொழிந்து வழிமொழிய உறுப்பினர்கள் சிலர் முன்வந்தனர். ஈ.பி.டீ.பி உறுப்பினர் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதன்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பெரும்பான்மை வாக்குகளால் வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. (173)



## தெருக்கூத்து ஆற்றுகை

சண்டிலிப்பாய்.டிச.14
சண்டிலிப்பாய் செயலக பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு. தெருக்கூத்து ஆற்றுகை மேற்கொள்ளப்பட்டது.

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்தமையை அடுத்து அது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் சண்டிலிப்பாய் வி. என். அக்கடமி கல்வி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வி.கஜரூபனின் வழிகாட்டலில் கல்வி நிலைய ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றிணைந்து தெருக்கூத்து ஆற்றுகை ஒன்றினை வழங்கியிருந்தனர்.

சண்டிலிப்பாய் பிரதேச எல்லைக்குட்பட்ட மானிப்பாய், பண்டத்தரிப்பு, பிரான்பற்று, சாவற்காடு, முள்ளி மற்றும் மாகியப்பிட்டி ஆகிய இடங்களில் இந்த ஆற்றுகை நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த செயற்பாட்டுக்கு மானிப்பாய் பொலிஸ் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் என்பன ஆதரவு வழங்கியிருந்தன.

அதேவேளை தமது பிரதேசத்திலும் இந்த அற்றுகையை செய்யுமாறு தையிட்டி பிரதேச இளைஞர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப தையிட்டியிலும் தெருக்கூத்து ஆற்றுகை வழங்கியதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டின் போது சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவின் உத்தியோகத்தர் மற்றும் மானிப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-104)

### வவுனியா மாவட்டத்தில் டெங்கிலிருந்து பாதுகாக்க
# கல்வி நிலையங்களுக்கு மேலுமொரு வாரம் பூட்டு

வவுனியா, டிசெ. 14
டெங்கு நோய்த் தொற்றுக் காரணமாக, வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதற்கு விதித்த தடை, மேலும் ஒருவாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. 550க்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் தடையுத்தரவு விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தனியார் கல்லூரி உரிமையாளருக்கான சந்திப்பொன்று வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், வவுனியா நகரசபை உப தலைவர், செயலர், உறுப்பினர்கள் , பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவர்கள், நகரசபை ஊழியர்கள், தனியார் கல்லூரி உரிமையாளர்கள், தனியார் கல்லூரி ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தனியார் கல்லூரி உரிமையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் டெங்குத் தாக்கம் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டது. தனியார் கல்லூரிகளை மூடியதன் காரணமும் அங்கு விவ ரிக்கப்பட்டது. அதன்போது, தாய்கள் எதிர்கொள்ளும் சிக்கல் குறித்து தனியார் கல்லூரி உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர். சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் தனியார் கல்லூரிகளின் தனியார் கல்வி நிலையங்கள் மறு அறிவித்தல்வரை இயங்குவதற்கான தடையுத்தரவு மேலும் ஒருவாரத்துக்கு நீடிக்கப்பட்டது. (கு-ரி4)



## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.14
'ஜனநாயகமும் சகவாழ்வும்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகில் உள்ள சென் ஜோன் த பப்டிஸ்ற் தேவாலய பரிஷ் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ஐ)

# வடக்குக்குப் பேராபத்து

யாழ்ப்பாணம், டிசெ.14
மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்குரிய வழித்தட அனுமதியைப் புதிய அரசு நீக்கியுள்ளதால் வடக்கில் மணற்கொள்ளை பெரும் வேகம் எடுத்துள்ளது. இவ்வாறு கட்டுப்பாடற்ற முறையில் மணல்வளம் சுரண்டப்படுவதால் விரைவில் மணல்வளத்துக்குப் பற்றாக்குறைவு ஏற்படவுள்ளது. வடக்கின் சுற்றுச்சூழலுக்கும் பேராபத்து நிகழவுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மணல்வளம் கட்டுமானத்துக்கும் அபிவிருத்திக்குமான வளம் மாத்திரம் அல்ல. மணற்குன்றுகளின் உயரம் குறையக்குறைய நிலத்தின் கீழே நன்னீர் வில்லையின் தடிப்புக் குறைந்து , அவ்விடத்தைக் கடல்நீர் ஆக்கிரமிக்கின்றது. மண்கும்பான் என்ற நன்னீர் கிராமம் இன்று குடிதண்ணீர் தட்டுப்பாட்டுக்கு ஆளாகியிருப்பதன் பின்னணி இதுதான்.

இதற்கு முன்னரும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்றிருந்தாலும், அதனை ஏற்றிச் செல்வதற்கான வழித்தட அனுமதி மணற்கொள்ளையை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தி வைத்திருந்தது. தற்போது வழித்தட அனுமதி தேவையற்றதாக்கப்பட்டு காவல்துறையின் சோதனைக் கெடுபிடிகள் இல்லை என்றதும் சட்டவிரோத மணல் அகழ்வு விஸ்வரூபம் பெற்றுள்ளது. இது மண்கும்பானில் மணல் ஏற்றிய டிராக்டருக்கு தீ வைக்கும் அளவுக்குக் கடலோரக் கிராமங்களில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அபிவிருத்தியில் ஏற்படும் தாமதங்களையோ அல்லது வேறு காரணங்களையோ அடிப்படையாகக் கொண்டு அரசு வழித்தட அனுமதியைத் தேவையற்றதாக்கும் முடிவை எடுத்திருக்கலாம். இந்த முடிவு தென்னிலங்கையின் சுற்றுச்சூழலுக்கு ஏற்புடையதாகவும் இருக்கலாம். ஆனால் நிலத்தடி நீரை உயிர் ஆதாரமாகக் கொண்ட வடக்கின் சுற்றுச்சூழலுக்கும், வடக்கின் நிலைத்த அபிவிருத்துக்கும் இந்த முடிவு எவ்வகையிலும் பொருத்தம் அற்றதாகும்.

நடைமுறையில் இருக்கும் மணல் அகழ்வுக்கான அனுமதியால் மட்டும் மணற்கொள்ளையையோ, அதன் காரணமாக ஏற்படவுள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளையோ ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. இதனைக் கருத்தில் கொண்டு, நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் வழித்தட அனுமதி நீக்கத்தால் வடக்குக்கு ஏற்படவுள்ள பாதிப்புகளை அரசுக்கு எடுத்துக் கூறி மீளவும் அதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு உடனடியாக ஆவன செய்யவேண்டும் - என்றுள்ளது. (க)

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

## திருமதி வரதராசா செல்வராணி



கடந்த 16.11.2019 சனிக்கிழமை
மண்ணுலகை நீத்த எம் குலவிளக்கு

**திருமதி வரதராசா செல்வராணி**


அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எதிர்வரும் 16.12.2019 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள. அந்நிகழ்வில் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**குடும்பத்தினர்.**
**071 8569048, 071 972 2216**
**வரத விநாயகர் ஒழுங்கை,**
**தும்பளை, பருத்தித்துறை.**

VA/1060)(11/17)

# காற்று இல்லாமல் மீன் எப்படி உயிர் வாழ்கிறது?



காற்று இல்லாமல் எந்த உயிரினமும் உயிர் வாழ முடியாது, தண்ணீரிலும் காற்று இருக்கிறது. மீன்கள் தண்ணீரை வாய்க்குள் கொண்டுவந்து, செவுள்களின் மூலம் வெளி யேற்றுகின்றன.

இவ்வாறு தண்ணீர் செவுள்கள் வழியே வரும்போது, மென்மை யான தோல் தண்ணீரில் உள்ள ஒக்சிசனை இழுத்து, செல்களுக்கு அனுப்பி வைக்கிறது. சில மீன்கள் நுரையீரல் போன்ற உறுப்பைப் பெற்றிருக்கின்றன. அதனால் காற்றை நேரடியாகச் சுவாசிக்கின்றன. தண்ணீரை விட்டு வெளியே வந்து, சில நாள் கள்வரை கூட இவற்றால் உயிருடன் இருக்க முடியும்.

## பெறுகை அறிவித்தல்
## சபைநிதி வேலைத்திட்டம் - 2019
## நகராட்சி மன்றம் - சாவகச்சேரி

01. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை, மீள்கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை, CIDA தர முன்னுரிமை என்பன கருத்தில் கொள்ளப்படும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2019.12.14ஆம் திகதியிலிருந்து 2019.12.27 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் 2019.12.14 ஆம் திகதியிலிருந்து 2019.12.27 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் 14.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 2019.12.27 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2020.02.14) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

1. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(3)2/ CF/20/2019 | தம்பு தோட்ட பின் வீதி புனரமைப்பு கோயிற்குடியிருப்பு | 0.932 | 02 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.03.13 |
| 02 | NP/14/41(3)2/ CF/21/2019 | குஞ்சர் தரவு வீதி புனரமைப்பு மீசாலை கிழக்கு | 0.934 | 02 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.03.13 |
| 03 | NP/14/41(3)2/ CF/22/2019 | பழைய பொலிஸ்நிலைய கற்குழி ஒழுங்கை இணைப்பு வீதி புனரமைப்பு நுணாவில் கிழக்கு | 0.932 | 02 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.03.13 |
| 04 | NP/14/41(3)2/ CF/23/2019 | சண்முகனாந்தா 1ம் குறுக்கு வீதி புனரமைப்பு கல்வயல் | 0.934 | 02 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.03.13 |
| 05 | NP/14/41(3)2/ CF/24/2019 | ஹால்ரெக்ஸ் வீதி புனரமைப்பு சாவகச்சேரி | 0.934 | 02 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.03.13 |
| 06 | NP/14/41(3)2/ CF/25/2019 | கந்தசாமி கிளை வீதி புனரமைப்பு மீசாலை மேற்கு | 0.934 | 02 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.03.13 |
| 07 | NP/14/41(3)2/ CF/26/2019 | ஆசிரியர் வீதி கட்டம் 2 புனரமைப்பு சங்கத்தானை | 0.936 | 02 மாதம் | C9/C8 | 9,400.00 | 2020.03.13 |
| 08 | NP/14/41(3)2/ CF/27/2019 | நகராட்சி மன்ற பொன்விழா மண்டப திருத்தம் | 1.847 | 03 மாதம் | C9/C8 | 18,500.00 | 2020.03.13 |
| 09 | NP/14/41(3)2/ CF/28/2019 | நகராட்சி மன்ற கட்டடங்கள் திருத்தம் | 1.172 | 03 மாதம் | C9/C8 | 11,800.00 | 2020.03.13 |
| 10 | NP/14/41(3)2/ 24Mn/12/2019 | சாவகச்சேரி பொதுச்சந்தை கால்வாய் மூடி அமைத்தல் | 0.207 | 02 மாதம் | C9/C8 | 2,100.00 | 2020.03.13 |
| 11 | NP/14/41(3)2/ 24Mn/13/2019 | சாவகச்சேரி பொதுச்சந்தை வாகனத்தரிப்பிடம் அமைத்தல் | 0.688 | 02 மாதம் | C9/C8 | 6,900.00 | 2020.03.13 |
| 12 | NP/14/41(3)2/ 24Mn/14/2019 | மடம் அமைத்தல், மண்டுவில் | 1.094 | 03 மாதம் | C9/C8 | 11,000.00 | 2020.03.13 |

2.கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2019.12.20 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**
**2019.12.14**

# விடுகதை

1. இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?
2. ஒற்றைக் காலில் ஆடுவான், ஓய்ந்து போனால் படுப்பான். அவன் யார்?
3. தலையில் கிரீடம் வைத்த தங் கப்பழம் அது என்ன?
4. அடித்தால் விலகாது, அணைத் தால் நிற்காது. அது என்ன?
5. காற்று நுழைந்ததும் கானம் பாடுகிறான். அவன் யார்?
6. சுற்றும்போது மட்டும் சுகம் தரு வாள். அது என்ன?

# விடை

1. இதயம்
2. பம்பரம்
3. அன்னாசிப்பழம்
4. தண்ணீர்
5. புல்லாங்குழல்
6. மின்விசிறி

**கார்கள் விற்பனைக்கு**
1.TATA Indigo ecs, 2015, CAOxxxx Maroon
2.Maruti Suzuki 800 AC,2006, KBxxxx, Red
**தொடர்புகளுக்கு: 077 424 2327**

**விற்பனைக்கு**
**சூட்டி பெப்** விற்பனைக்குண்டு.
**077 071 2072** (cs29903)(13)

**வேலையாள்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கிவரும் அரிசி ஆலைக்கு வேலையாள்கள் (ஆண்) தேவை. சம்பளம் நாள் ஒன்றுக்கு ரூபா 1500/=
(CS 29912)(td.17)
**தொடர்பு: 076 9435080**

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபைநிதி - 2019

01. சபைநிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(ii) இலக்க 08.05.2019 ம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப் போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு இல்லாதவிடத்து அதனிலும் கூடியதரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமான தரத்தில் இக்ராட்/சீடா (ICTAD /CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி Vஇல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 021 2250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.என்னும் இடத்தில் 16.12.2019 ம் திகதியிலிருந்து 27.12.2019 ம் திகதி வரை வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/ (வரி நீங்கலாக) இனைசெலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர்.வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 27.12.2019ம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கோரப்பட்ட வேலைகளில் 1 தொடக்கம் 3 வரையான கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று – 28.02.2020) நாட்களாகும். 4 தொடக்கம் 7 வரையான கேள்விகளுக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது – 14.02.2020) நாட்களாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல. | ஒப்பந்த எண் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 01 | NP/14/41(17)/02 /CF/14/2019 | அராலி பகுதி வீதிகள் புனரமைப்பு ( துணைவி ஒழுங்கை, புளியடி ஒழுங்கை கிளை வீதி,யாழ் வீதி 1ம் ஒழுங்கை,ஓடைக்காடு 1ம் ஒழுங்கை கிளை வீதி,கம்பன்புலவு மயான வீதி) | 3.303 Mn (VAT நீங்கலாக) | 01 மாதம் | C7 and C8 வீதி | 33,100.00 | 27.03.2020 |
| 02 | NP/14/41(17)/02 /CF/15/2019 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புனரமைப்பு ( கலட்டி 1ம் ஒழுங்கை, கனகரட்ணம் வீதி 1ம் ஒழுங்கை –கட்டம் II , பிளாக்கை ஒழுங்கை-பிரதான வீதி துணைவி கிளை ஒழுங்கை, டச்சு வீதி-கிளை வீதி) | 2.548 Mn (VAT நீங்கலாக) | 01 மாதம் | C7 and C8 வீதி | 25,500.00 | 27.03.2020 |
| 03 | NP/14/41(17)/02 /CF/18/2019 | சுழிபுரம் பகுதி வீதிகள் குழு C புனரமைப்பு (பண்ணாகம் 6ம்ஒழுங்கை, பச்சந்தை வீதி, இராமாலியன் வீதி, பத்ரகாளி கோவில் வீதி) | 2.608 Mn (VAT நீங்கலாக) | 01 மாதம் | C7 and C8 வீதி | 26,100.00 | 27.03.2020 |
| 04 | NP/14/41(17)/02 /CF/13/2019 | கல்லை வேம்படி வீதி புனரமைப்பு | 1.997 Mn (VAT நீங்கலாக) | 01 மாதம் | C8 and C9 வீதி | 20,000.00 | 13.03.2020 |
| 05 | NP/14/41(17)/02 /CF/16/2019 | சுழிபுரம் பகுதி வீதிகள் குழுAபுனரமைப்பு(பூதராசி அம்மன் வீதி-தொல்புரம் கிழக்கு, இவான் வீதி 4ம் ஒழுங்கை- தொல்புரம், மூளாய் தேவாலய வீதி 2ம் ஒழுங்கை) | 1.896 Mn (VAT நீங்கலாக) | 01 மாதம் | C8 and C9 வீதி | 19,000.00 | 13.03.2020 |
| 06 | NP/14/41(17)/02 /CF/17/2019 | சுழிபுரம் பகுதி வீதிகள் குழு Bபுனரமைப்பு(புளியடிவீதி-பொன்னாலை, நல்ல தண்ணீர் கிணற்று வீதி-நெல்லியான், அம்மன் வீதி-நெல்லியான் | 1.977 Mn (VAT நீங்கலாக) | 01 மாதம் | C8 and C9 வீதி | 19,800.00 | 13.03.2020 |
| 07 | NP/14/41(17)/02 /CF/19/2019 | சங்கானை பகுதி வீதிகள்புனரமைப்பு(ஓடக்கரை வீதி-கிளை வீதி, குளத்தடிவீதி, வைத்தியசாலை வீதி 1ம் ஒழுங்கை ). | 1.982 Mn (VAT நீங்கலாக) | 01 மாதம் | C8 and C9 வீதி | 20,000.00 | 13.03.2020 |

11. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 20.12.2019 அன்று பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.

**த.நடனேந்திரன்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**14.12.2019.**

"புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்"
எங்கள் ஸ்தாபனத்தின் **60**ம் வருட பூர்த்தியை முன்னிட்டு **10%** தொடக்கம் **50%** வரை கழிவு வழங்கப்படும்.
கதைப்புத்தகங்கள், கொப்பிகள், திருக்குறள், டிக்சனறி, சாட்,கிறிஸ்மஸ் மரங்கள், அலங்காரப் பொருட்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம்.
விடுமுறை நாட்களிலும் ஸ்தாபனம் திறக்கப்படும்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல.212, 214, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### புஸ்கலாம்பாள் மகேஸ்வரக்குருக்கள்



யாழ். வடமராட்சி துன்னாலையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி சரசாலையை வதிவிடமாகவும் கொண்ட புஷ்கலாம்பாள் மகேஸ்வரக் குருக்கள் அவர்கள் 12-12-2019 வியாழக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற ச.இராமச்சந்திர ஐயர் (துன்னாலை சாரதாபீட சமஸ்கிருத உபாத்தியார்), இராசலட்சுமி அம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் அமிர்தாம்பாள் தம்பதிகளின் மருமகளும், மகேஸ்வரக்குருக்கள் (மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பிரதமகுரு) அவர்களின் அன்பு மனைவியும், வித்தியா சுதாகரசர்மா அவர்களின் அன்புத் தாயாரும், கெ.சுதாகரசர்மா அவர்களின் அன்பு அத்தையும் ஆவார். இறுதிக் கிரியைகள் யாவும் 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் சரசாலை இல்லத்தில் நடைபெற்று 9.00 மணியளவில் புகுந்த இல்லத்திலிருந்து எங்கள் தங்கையின் உடல் சாரதாபீடம், துன்னாலை கரவெட்டியில் அமைந்துள்ள பிறந்த இல்லத்திற்கு சென்று அங்கிருந்து துன்னாலை தியான் காடு இடுகாட்டில் 10.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சாரதாபீடம், துன்னாலை — தகவல்: குடும்பத்தினர்

மலர்வு 13 . 08 . 1955



உதிர்வு 11 . 12 . 2019

### திருமதி சிவரஞ்சினி மகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் – வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்)

யாழ்ப்பாணம், உடுவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியா சின்னப்புதுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவரஞ்சினி மகேஸ்வரன் கடந்த 11.12.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவரத்தினம் – சிவஞானம் தம்பதிகளின் மூத்த மகளும், ஏகாம்பரம் மகேஸ்வரனின் அன்பு மனைவியும், வானதி (கனடா), கோகுலன் (நாணயபன் - ஆசிரியர், வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலயம் - வவுனியா), மயூரா ( ஆசிரியை - யாழ். மானிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அஜித்தன் (கனடா), நிரோஷன் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), திவ்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவதாசன் (லண்டன் - கனடா), யசோதா (ஓய்வுபெற்ற ஆசிரியை, வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்), காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், விசாலி, தர்மினி, விருத்திகா, விருத்தீஸ், கிஷோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.20, சின்னப்புதுக்குளம்,
வவுனியா.
(AVA/621)(11,17)

தகவல்:-
குடும்பத்தினர்.

024 222 4427, 077 726 2494

## ஒரு நாடு...

ஹொங்காங்கில் நடைபெற்றதைப் போன்று ஒரு நாடு இரு தேசம் எனும் எண்ணக்கருவை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு பலம்வாய்ந்த நாடுகள் அழுத்தம் பிரயோகிக்கக்கூடாது. உலகின் பலம்வாய்ந்த நாடுகளின் வரையறைக்குள் கட்டுப்படுத்தப்படும் தேவை இலங்கைக்கு இல்லை. ஏனைய நாடுகளிடம் நட்பை எதிர்பார்க்கும் அதேவேளை, ஆதிக்கம் செலுத்துவதை நிராகரிப்பதாகவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜப்பான் வெளிவிவகார அமைச்சரை நேற்று முற்பகல் சந்தித்த போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான சமாதானம், உறுதிப்பாட்டுத்தன்மை மற்றும் நல்லிணக்கத்தை பலப்படுத்துவதற்காக தாம் முன்நிற்பதாக ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்கத்துக்கான அரசியல் செயற்பாடுகள், பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் என்பன குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையை சூழவுள்ள கடற்பிராந்தியம் இலங்கைக்கே உரித்தானது என்பதை மறந்து பல வருடங்களாக இந்து - பசுபிக் கடற்பிராந்தியம் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றமை சிந்திக்க வேண்டிய விடயமாகும். பிரித்தானியாவின் காலனித்துவத்தின் கீழ் இந்தியா, பாகிஸ்தான் பிரிக்கப்பட்டதன் பின்னர், சுதந்திரம் வழங்கப்பட்டதன் ஊடாக இந்த வலயம் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் புலனாகின்றது.

நாட்டிற்கேயுரிய பொருளாதார வலயமான, இலங்கையின் நிலப்பரப்பை விட 9 மடங்கு அதிகமான அந்தப் பகுதி இலங்கை கடற்பரப்பென அழைக்கப்பட வேண்டும். சர்வதேச சட்டத்திற்கமைய, இந்த கடற்பரப்பு இலங்கையின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழுள்ளது. இதனை உலகின் பலம்வாய்ந்த நாடுகள் ஏற்றுக்கொள்வதற்கும் மதிப்பளிப்பதற்குமான சந்தர்ப்பம் தற்போது உதயமாகியுள்ளது, என்றார். (ஒ,5)

## மழைக்கு...

டையே மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை விடுத்துள்ள அறிக்கையில் எதிர்வுகூறியுள்ளது.

அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் சிறிதளவில் மழை பெய்யும். சப்ரகமுவ, மேல், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களாலும் பலத்த காற்றாலும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

காங்கேசந்துறையிலிருந்து திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காங்கேசந்துறையிலிருந்து மன்னார் மற்றும் புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 55 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் - என்றுள்ளது. (ஒ,5)

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified biddersfor the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Minimum Required ICTAD Grade | Required Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/ 2020-01 | Conversion of Single storied building into Three storied building and Completion of Exam Hall at Centre for Open & Distance Learning, University of Jaffna | 23.3 | 180 | C6or above | Rs. 230,000.00 |
| 2 | YA/CWP/RE/ 2020-02 | Construction of Car park including Approach Road for Faculty of Agriculture, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi | 7.3 | 150 | C7 or above | Rs. 75,000.00 |
| 3 | YA/CWP/RE/ 2020-03 | Construction of Common Vehicle Park including Approach Road for Kilinochchi Premises, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi | 15.2 | 150 | C6 or above | Rs. 150,000.00 |
| 4 | YA/CWP/RE/ 2020-04 | Renovation Works at Centre for Open & Distance Learning (CODL), University of Jaffna | 1.5 | 60 | C9 or above | Rs. 15,000.00 |
| 5 | YA/CWP/RE/ 2019-31 | Road Network for Faculty of Engineering, University of Jaffna | 5.3 | 60 | C7or above | Rs. 55,000.00 |
| 6 | AHEAD/RA2 /ELTAELSE/ JFN/FAG/W ORKS/03 | Renovation work to the Existing Student Class Rooms, Faculty of Agriculture, University of Jaffna, Kilinochchi | 16.0 | 180 | C6 or above | Rs. 160,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffnaand inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs. Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffnafrom16thDecember2019 until2nd January 2020 from9:00 hrs to 15:00hrsand upon payment of a non-refundable fee of Rupees Three thousand Five hundred (Rs. 3,500/-) for each bids No. 1, 3&6, Rupees Two thousand five hundred (Rs. 2,500/-) for each bids No. 2 & 5, Rupees One thousand five hundred (Rs. 1,500/-) for bid No. 4.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch to reachon or before 10.00 hrs on 3rd January 2020.Bids will be opened soon after closing, at 10.00 hrs on 3rd January 2020at the Board Room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 90 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "Competent Authority, University of Jaffna."
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Section 5
9. Pre Bid meeting will be held at Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna at 10.00 hrs on the 27thDecember, 2019.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**12/12/2019**

## விசேட சலுகை

### நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள வசந்தம் பாமசியில் மருந்துப் பொருட்கள், பால்மா வகைகள், குழந்தைகள், தாய்மார்களுக்கான அனைத்து விதமான பொருட்களையும் விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

சிரேஷ்ட பிரஜைகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நிர்வாகம்.**

**தொடர்பு:-021 221 7344, 077 939 6804**

## Vacancies at The Thinnai Hotel
## Receptionist & Room Attendant Needed
## Requirements

1.Passes in O/L /A/Ls or any relevant qualifications
2.Excellent communication skills in English & Tamil
3.A strong and honest personality
4.Willingness to work on Shifts basis
5.Previous Experience at a reputed hotel is preferred
6.Computer literacy /systems

Email your CV to hr@thethinnai.com with your photograph

The Thinnai ,86, Palaly Road, Jaffna – 0212030400

(in.11961) (13.17)

## ஆறா நினைவில் ஆண்டு பதின்மூன்று

தோற்றம் 10.05.1959 மறைவு 07.12.2006

**அமரர் சிவசாமி ரஞ்சன்**

(முன்னாள் பெற்றோலிய கூ.தாபன ஊழியர், யாழ்.)

ஆண்டுகள் பதின்மூன்றாகியும்
ஆறவில்லை துயரம்
மாறவில்லை மனங்கள்
தேறவில்லை நம் ஏக்கங்கள்
முடியவில்லை எதுவும்
சொல்லவில்லை துன்பத்தை
ஆறாக பெருகுகின்றது
உன்னை நம்பி வந்தவளை
நடுவில் விட்டுச் சென்றது
தவிக்கின்றேன் எனக்கென்று யாரும் இன்றி
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

திதி:- துதியை (14.12.2019)



**குடும்பத்தினர்.**

11/5, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## விண்ணுலக வாழ்வில்
## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

"ஆண்டவரே என் ஆன்மாவை உம்மை நோக்கி எழுப்பினேன் ஆதலால் உம் ஊழியனுடைய உள்ளத்தை மகிழ்வித்தருளும்"
(சங்கீதம் 83)

**அமரர் யோண் செல்லையா ஆதர்**

(ஓய்வுநிலை இ.போ.ச.களஞ்சிய காப்பாளர்)

தோற்றம் 14 . 08 . 1950



மறைவு 14 . 11 . 2019

கடந்த 14.11.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் **யோண் செல்லையா ஆதர்** அவர்களின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (14.12.2019) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டோருக்கும், வெளிநாட்டிலிருந்து வந்து பங்கு கொண்டோருக்கும் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் சகல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கரந்தன் வீதி,
ஊரெழு கிழக்கு, ஊரெழு.

(CS/29906)(11,17)

**குடும்பத்தினர்.**
**077 374 7538**




யாழ்.நகரில் புதிய பரிமாணத்துடன் நவீன வசதிகளைக் கொண்ட வைத்தியசாலை

# வீனஸ்

## விசேட வைத்தியசாலை

136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

021 222 4172 / 021 222 8470




வடக்கு கிழக்கில் முதன்முறையாக தனியார்துறையில் "Modular Operation Theatre" உடன் கூடிய வைத்தியசாலை

- ✓ நியாயமான கட்டணத்திலான சத்திரசிகிச்சை. ஏனைய சேவைகள்.
- ✓ நிலகீழ் (Under Ground) வாகன தரிப்பிட வசதிகள் கொண்ட ஒரே வைத்தியசாலை.
- ✓ குளுமையான "Luxury Room" ஐக் கொண்ட நியாயமான கட்டணத்திலான வார்ட் வசதிகள்
- ✓ 24 மணிநேர அனுபவம் மிக்க வைத்தியர்களின் பார்வையில் - OPD சேவை
- ✓ 24 மணிநேர வார்ட் (Ward Admission)அனுமதி

## வைத்திய நிபுணத்துவ சேவை (Channel Specialist Service )

| | |
|---|---|
| பொது வைத்தியம் | பொது சத்திர சிகிச்சை |
| குழந்தை வைத்தியம் | மகப்பேற்று பெண் நோயியல் வைத்தியம் |
| என்பு முறிவு நோவு வைத்தியம் | இதய நோய் வைத்தியம் |
| நரம்பியல் அறுவைச்சிகிச்சை | நரம்பியல் சிகிச்சை |
| தோல் வைத்தியம் | கண் வைத்தியம் |
| மனநல மருத்துவம் | புற்றுநோயியல் |
| மூட்டுவாதவியல் சிகிச்சை | நீரிழிவு நிபுணத்துவ ஆலோசனை |
| காது, மூக்கு, தொண்டை வைத்தியம் | சிறுநீரக, சனனி தொகுதி வைத்திய சிகிச்சை |

மருத்துவ ஆய்வுகூட வசதி (Medical Laboratary Faciality)
X-கதிர் படப்பிரிவு (X-ray Department)
அதிதீவிரசிகிச்சைப் பிரிவு (ICU)
அவசரசிகிச்சைப் பிரிவு (ETU)
பற் சிகிச்சைநிலையம் (Dental Unit)
இயன் மருத்துவவசதி (Department of Physical Medicine)
Endoscopy/ Colonoscopy Unit
ECG/ ETT / Echo/ Ultra Sound Scan
அனைத்து வகையான சத்திர சிகிச்சைகளும் - New Modular Operation Theater - இல் நியாயமான கட்டணத்தில் செய்துகொள்ளலாம்.

### விசேட சலுகைக்கட்டணத்தில் கண்வைத்திய சேவை

இம் மாதம் - 17, 18, 20 ஆம் திகதிகளில் கண்வைத்திய நிபுணர் Dr.M.மலரவன் அவர்களால் பிரத்தியேகமாக தங்களின் கண்வைத்திய ஆலோசனைகளினை எமது வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

முற்பதிவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்



## திருமதி பாக்கியதேவி சுந்தரமூர்த்தி

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கு சந்தை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியதேவி சுந்தரமூர்த்தி நேற்று (13.12.2019) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பூரணம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்வவிநாயகம் - தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும், டட்ஷாயினி (ஆசிரியை - மு/ விசுவமடு மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயும், தபேசனின் (கட்டார்) அன்பு மாமியும், பவிஷியனின் அன்புப் பேர்த்தியும், தெய்வேந்திரம், இந்திராதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை), யோகேந்திரம் (கனடா), இராஜேந்திரம், சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானசௌந்தரி, ஆனந்தராஜா, ஏஞ்சலா (கனடா), விமலாதேவி (ஆசிரியை - யா/ கட்டுவன் புலம் மகாவித்தியாலயம்), விஸ்வேஸ்வரன் (கனடா), அகிலாண்டநாயகி, அருள்நாயகி, சாந்தநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி,
ஆவரங்கால்.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.29253) (13.17)

077 430 1975, 077 639 5747, 021 223 1930

## முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி – 2020/2021

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- கற்கைநெறிக்கான காலம் - ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
- கற்பிக்கப்படும் மொழி - தமிழ்
- விண்ணப்பிப்பதற்கான தகுதி - க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- கற்கைநெறிக்கான கட்டணம் - ரூபா. 31 ,250/-

கட்டண விபரம் :

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம் | - 2.500.00 |
| கல்விக் கட்டணம் | - 23.000.00 |
| பரீட்சைக் கட்டணம் | - 5.000.00 |
| நூலகக் கட்டணம் (திரும்பப் பெறத்தக்கது) | - 750.00 |
| மொத்தம் | - 31.250.00 |

- விண்ணப்ப முடிவுத் திகதி - 28.02.2020
- விண்ணப்பிப்பதற்கான முறை :

விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணமாக ரூபா 300 ஐ செலுத்தி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவங்களைத் தபால்மூலம் அனுப்புவதாயின் இணைப்பாளர், நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி, முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு, கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும். இணையத்தளம் ஊடாகவும் விண்ணப்பங்களை தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**மேலதிக தொடர்புகளுக்கு : 021 222 3610**

**www.maco.jfn.ac.lk**

பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

# மரண அறிவித்தல்

## திருமதி ஜோதிமலர் றோயிஸ்நேசரட்ணம் (மலர்)



இணுவில் கிழக்கு, கொக்கன் வளவினை பிறப்பிடமாகவும் பழைய தபாற்கந்தோர் வீதி, உரும்பிராயினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோதிமலர் றோயிஸ்நேசரட்ணம் 10.12.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - கணேசமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான றொபேட் இராஜசிங்கம் - பொன்மலர் தம்பதியரின் அன்பு மருமகளும், றோயிஸ்நேசரட்ணத்தின் அன்பு மனைவியும், சிவபுத்திரன் (ஆசிரியர் - யா/ கோப்பாய் மகாவித்தியாலயம்), நிஷானி, றொஷாந் ஆகியோரின் அன்புத் தாயும் நாகேஸ்வரி, நாகேந்திரம், பூபாலசிங்கம், சந்திரசேகரன் (கனடா), புஸ்பராணி, காலஞ்சென்ற சுவர்ணா மற்றும் சாந்தரூபி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயச்செல்வி (ஆசிரியர் - யா/புனித கன்னியர்மடம் பாடசாலை), ஹபிலன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமியும், வைஷ்ணவி, அக்ஷரன், சுபாக்நேயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 869 4518
(றோ. சிவபுத்திரன்)

பழைய தபாற்கந்தோர் வீதி,
உரும்பிராய் மேற்கு.

(cs.29904) (13.17)

## இடமாற்றம்...

ஒருவரே இந்த இடமாற்றத்துக்கான அரசியல் அழுத்தத்தைப் பிரயோகித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் எதிர்வரும் மே மாதம் 23ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளார். அதற்கு முன்னதாக இந்த இடமாற்றத்தை மேற்கொள்வதற்கு மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் முயற்சிப்பதாகக் கூறப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயல்ராக இருந்த சு.அருமைநாயகம் இராஜாங்க அமைச்சின் செயலராகியுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் பதவி வெற்றிடமாகியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டச் செயலரான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கிளிநொச்சிக்கு இடமாற்றம்கோரி விண்ணப்பித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு ரூபவதி கேதீஸ்வரனை நியமித்து யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகனை முல்லைத்தீவுக்கு இடமாற்றம் செய்ய முயற்சிக்கப்படுவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலராக, கொழும்பு அமைச்சின் மேலதிக செயலர் ஒருவரை நியமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பரிந்துரை, உள்நாட்டலுவல்கள் அமைச்சால், அமைச்சரவையின் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலராகப் பணியாற்றிய கனகேஸ்வரனை, மேற்படி நாடாளுமன்ற உறுப்பினரே முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடமாற்றுவதற்கான அழுத்தத்தை கொடுத்திருந்ததாகக் கூறப்படுகின்றது. (ஒ,5,105)

## மீள் கேள்வி அறிவித்தல் - 2020.
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட,கீழ் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 23.12.2019 பி ப 3.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி : 24.12.2019 பி ப 2.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 24.12.2019 பி ப 2.30 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் :வலி தென்மேற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம்.

2020 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அட்டவணை

| இல | விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|
| | மானிப்பாய் பட்டின உபஅலுவலகம் | | | |
| 1 | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை(புதிய கட்டிடத்தொகுதி) | 5,000.00 | 41,424.75 | 600.00 |
| | மானிப்பாய் கிராம உபஅலுவலகம் | | | |
| 1 | காக்கைதீவுப் பொதுச் சந்தை, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் மற்றும் பொது மலசலகூடம் உள்ளடங்கலானது | 8,000.00 | 722,000.00 | |
| 2 | காக்கைதீவுப் பழைய மீன் சந்தை கட்டிடம் (கடலுணவுகள் களஞ்சியப்படுத்துவதற்கு மாத்திரம்) | 1,500.00 | 20,757.50 | |
| 3 | சாவற்கட்டு சந்தை | 3,500.00 | 276,560.00 | |
| | பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம் | | | |
| 2 | பண்டத்தரிப்பு சாந்தைச் சந்தை | 5,000.00 | 446,000.00 | |
| | பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம் | | | |
| 1 | மாகியப்பிட்டி சந்தை கோழி இறைச்சிக்கடை | 2000.00 | 98,,000.00 | 800.00 |
| 2 | இளவாலை பொதுச்சந்தை கோழிஇறைச்சிக்கடை | 1,500.00 | 119,000.00 | |
| 3 | மாதகல் பொதுச் சந்தை கோழி இறைச்சிக் கடை | 1500.00 | 41,424.75 | 750.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 05.10.2019ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் தலைமை அலுவலகம் ,உப அலுவலகங்கள் என்பனவற்றில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அ.ஜெபநேசன்,**
**தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்.** (in.11961) (13.17) **2019.11.14.**

## மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா தனலெட்சுமி



நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், GPS விளையாட்டு அரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா தனலெட்சுமி கடந்த **(10.12.2019)** செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா- பார்வதி தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பொன்னாச்சி தம்பதியின் மருமகளும் இதயரயனி (பிரான்ஸ்), ஜெயவதனி (ஆசிரியர்), ஜெகதீசன் (கனடா), சுதர்சன் (கிராமசேவகர், J/267) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சன் (பிரான்ஸ்), சங்கீதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆரணி, செந்தூரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அக்ஷயாவின் பூட்டியும் காலஞ்சென்ற மீனாம்பிகை, நடராசா மற்றும் இராசம்மா காலஞ்சென்ற நாகராசா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, மருதடியான், நாகமுத்து, சுந்தரம்பிள்ளை, பொன்னம்பலம், சின்னத்தம்பி, தில்லைவனம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(15.12.2019)** ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக **10** மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**GPS விளையாட்டரங்க வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

C11847(16/17)

**தொடர்பு:- 021 223 0243**

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 09 . 1957



மறைவு 11 . 12 . 2019

## செல்வி குலசிங்கம் உசாதேவி

உடுவில் தெற்கை பிறப்பிடமாகவும் தோணிக்கல் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி குலசிங்கம் உசாதேவி கடந்த (11.12.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலசிங்கம் பரமேஸ்வரி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற காஞ்சனாதேவி மற்றும் உதயராஜ் (ஏழாலை), சுதீர்த்திரா (இந்தியா), காலஞ்சென்ற சந்திரராஜா, மற்றும் சறோஜாதேவி (ஜேர்மன்) ஆகியோரின் சகோதரியும் ஜெயராசா (வவுனியா), தயாளினி (ஏழாலை) காலஞ்சென்ற ஸ்ரீராஜ் மற்றும் சிவநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஜெனார்த்தனி (வவுனியா), ஜெனார்த்தனன் (வவுனியா), ஜெரோன் (வவுனியா), ரிஷாந் (வவுனியா), ஆகியோரின் சிறியதாயும் உதயானுஜா (ஏழாலை) வின் அத்தையும் சிந்துஜா (பிரான்ஸ்), கபிலன் (இந்தியா), நிரோன் (பிரான்ஸ்), திசோன் (இந்தியா) ஆகியோரின் பெரியதாயும் சிவானுயா (ஜேர்மனி), சங்கீர்த்தன் (ஜேர்மனி), சாகித்தியன் (ஜேர்மனி), சிவஜா (ஜேர்மனி), ஆகியோரின் பெரியம்மாவும் விஜயநிமலன் (பிரான்ஸ்), பிரகாஷ் (பிரான்ஸ்), நிரோசா (இந்தியா), கஸ்தூரி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் பவித்திரன் (இந்தியா), கம்ஷவி (இந்தியா), சஞ்சீவ் (பிரான்ஸ்), பிருத்திகா (பிரான்ஸ்), சிஜே (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது சகோதரன் உதயராஜின் இல்லத்தில் (ஏழாலை வடக்கு, ஏழாலை) நடைபெற்று தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

# அவதானம்!

கே.எஸ்.சிவஞானராஜா

2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் 2ஆயிரத்து 500 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு தீயிட்டு எரித்து அழிக்கப்பட்டுள்ளன. இது வேறெங்கேயும் நடைபெறவில்லை. யாழ்.குடா நாட்டிலேயே நடைபெற்றிருக்கின்றது. இதைவிட இன்னுமே அகப்படாமல் வலு சூட்சுமமாக கஞ்சா மாத்திரமல்ல இன்னும் பல போதைப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் உலாவருகின்றன என்பதை ஊடகச் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன. இவை இன்பநுகர்ச்சிக்கு வழி கோலுவன. இதற்கும் இளவயதினர் தவறாக அகப்படுவதற்கும் ஏற்ற மூலப்பொருள்கள் போதையுள்ளீடுகளிலேயேகாணப்படுகின்றன.



2010 ஆம் ஆண்டிலே 249 இளவயதுக் கர்ப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சராசரியாக ஒவ்வொரு மாதமும் இருபது இளவயதுக் கர்ப்பங்கள் நிகழ்கின்றன.

**வாங்கும் போது கவனம்**

வீட்டுக்கு வெளியிலே விற்பனையாகும் இனிப்புப் பண்டங்கள், குடிபானங்கள், பலகாரங்கள், உணவுப் பதார்த்தங்கள், குளிரூட்ட ப்பட்ட பொருள்கள், குளிர்களி, கொறிப்புச் சாமான்கள் அனைத்தையும் வாங்கும்போதும், சாப்பிடும் போதும் நாம் ஒவ்வொருவரும் அவதானமாகவும் எச்சரிக்கையோடு எம்மை நாமே காப்பாற்ற வேண்டும். நாம் என்று கருதப்படுவது பெற்றோர்களையே ஆகும்.

**இளவயது கர்ப்பங்கள்**

2010 ஆம் ஆண்டிலே 249 இளவயதுக் கர்ப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சராசரியாக ஒவ்வொரு மாதமும் இருபது இளவயதுக் கர்ப்பங்கள் நிகழ்கின்றன. 2011 ஆம் ஆண்டிலே மூன்று மாதம் ஆய்வுக்குட்படுத்திய போது ஆச்சரியமாக 203 இளவயது கர்ப்பங்கள் அதிகரித்து வியப்பை ஏற்படுத்தியது. இதன் பிரகாரம் ஒரு மாதத்தில் சராசரியாக 67 இளவயது கர்ப்பங்கள் நிக ழ்ந்துள்ளன. இதன்படி ஒரு வருடத்தில் சுமார் 800 இளவயது கர்ப்பங்கள் நடைபெறப் போதைப் பாவனைகள் கட்டியம் கூறி நிற்கின்றன.

**பாலியல் கொடுமைகள்**

இலங்கையைப் பொறுத்த அளவில் ஒரு நாளைக்கு 90 பாலியல் கொடுமைகள் நடைபெறுகின்றன. இதில் பாதிக்கப்படுவது பெண்களும் சிறுமிகளுமே. அண்மையில் கூட ஒன்பது வயதுச் சிறுமி ஒரு உயர்ந்த பீடத்தில் வைத்து இம்சிக்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது. இதற்குக் குரல் கொடுக்க வேண்டியவர்கள் அடங்கிப் போயிருப்பதன் மர்மம் புரியவில்லை. ஒரு குருவானவர் அதுவும் வயது முதிர்ந்தவர் தகாத முறையில் ஒரு சிறுமியிடம் நடந்து கொண்ட விதம் ஆண்டவனுக்கே பொறுக்காத நிலையில் பகிரங்கமாயிற்று.

இந்த விடயத்தில் நாகரிகம் தெரிந்தவர்கள் என்று கூறிக் கொள்வோர் அநாகரிகத்துக்கு ஒத்துப் போவதாக இருத்தல் ஆகாது. துணிந்து குரல் கொடுக்கவல்ல ஒரு தலைமை எம்மிடத்தில் இல்லாமல் நாம் சிக்கித் தவிப்பது எம்முடைய தவக்குறையே ஆகும். பெரியவர்கள் செய்யும் குற்றங்கள் அமத்தியே வாசிக்கப்படுகின்றன.

**ஒருவனுக்கு ஒருத்தி**

இந்த நிலையினால் இந்த மண் புண்பட்டுப் போயுள்ளது. எல்லாம் வல்ல இறைவன் எப்போது கண்திறக்கிறானோ அப்போது பெண்களைத் தீண்டி யோரும் தப்பித்தவர்களும் தவிடுபொடியாவர். இது சத்தியமே! இதைவிட ஒரு முக்கியமான விடயம். ஒருவனுக்கு ஒருத்தி என்பது சமூகச் சட்டம். இதை மீறுவதாலேயே வயது வந்தவர்கள் தடம்புரளுகிறார்கள்.

மேலும் இல்லறத்திலிருந்து கொண்டு துறவறத்தை எண்ணுவதும் துறவறத்திலிருந்து கொண்டு இல்லற நாட்டம் கொள்வதும் ஆபத்தானதே. சில இடங்களில் வீட்டிலேயே கிளி இருக்கும். ஆனால் பறக்கின்ற கிளியைப் பிடிக்க கனவு காண்பர்.

மேற்படி நான்கு திறத்தினராலும் மது, போதை, ஆபாசப் படங்கள், இணையம், தொலைபேசி, மேனி வனப்புக்கள் ஆகிய நுகர்வி னாலும் பெண் பிள்ளைகள் எனப்படுவோர் இளைஞர், பெரியவர்கள் என்ற இரு வகுதியினராலும் கர்ப்பம் தரிக்கப் பெறும் அளவுக்கு மனோவயப்படுத்தி விடுகி றார்கள்.

இந்த அநாகரிகத்தை வேடிக்கை பார்ப்பதாக எவருமே இருத்தல் ஆகாது. பாவம் சும்மா விடாது.



## வெள்ளி விழா வாழ்த்துக்கள்

எதிர்காலச் சிற்பிகளை
உருவாக்கும் தாய் நீயே!
உனக்கின்று இருபத்தைந்து
நிறைந்ததுவோ?
அதிபுகழாம் சேவைகளை அன்புடனே
ஆற்றியதால் அகமகிழ்ந்து உன்னை
இன்று வாழ்த்துகின்றோம்!
நதிபோல் நீ நடந்து நம் மழலைச்
சிறார்களுக்கு நற்களங்கள்
விளையாட்டு பண்பாடு எல்லாம் விதைத்
தமையை நாம் மறவோம் வீசும் புக
ழோடுவியன் உலகில் பல நூறு ஆண்டே
வாழ்க!
மாண்புறு நல் மகாலிங்கம் மைந்தன்
பெயர் இலங்க மாநிலத்தில நீ மலர்ந்து
மகிழ்ச்சி செய்தாய்ஆண்டிருபத் தைந்
தாக அரும்பணிகள் நீ செய்து ஆன்றோ
ராய் பலபேரை அவர் செய்தாய்!
அமரத் தூண்டாமணி விளக்காக
அடர்ந்து மண்ணுலகில் தொட்டபணி
நின்றிலரும் நீக பல நூறாண்டே!
வாண்மையோடு புவேந்தன் பராமரிப்பு
நிலையமது வாழ்க பல்லாண்டு பல்
லாண்டு பலநூறாண்டே!
சின்னச் சிட்டுக்களை செதுக்கும் தாய்
நீயே!
சீரினைத் திறந்தோடு செழித்தே வாழ்க!
மேன்மேலும் உந்தன் மேன்மைப் பணி
விஞ்சி மேதினியில் பெயர்
நாட்டி நீடு வாழ்க!
மன்னன் புவேந்தன் திருநாமம்
நின்றிலங் மாண்புடனே பணியாற்றி
வாழ்க வாழ்க!
ஆண்டனே அருள்பொங்க ஆண்றோர்
வாழ்ந்திசைக்க அம்மா நீ மண்ணுலகில்
வாழ்க வாழ்க!

மனம் மகிழ்ந்து வாழ்த்தும்
பெற்றோர் பழைய மாணவர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோத்தாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் சந்திப்பு நடத்தியிருந்தார். ஊடகத்துறையினரை எதிர்கொள்வதைத் தவிர்த்து வந்த அவர் வேறு வழியின்றி நேற்றுமுன்தினம் தனது முதலாவது சந்திப்பை நடத்தினார்.

'நாட்டின் ஊடக சுதந்திரத்துக்கு எனது ஆட்சிக் காலத்தின் போது எவ்வித அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட மாட்டா. எந்தவொரு நியாயமான விமர்சனத்துக்கும் இடமுள்ளது. நாட்டுக்கும் நாட்டின் நற்பெயருக்கும் ஏற்றவகையில் ஊடகப் பணியில் ஈடுபட்டு, ஊடகங்களின்மூலம் நாட்டுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்க்கின்றேன்' என்று கோத்தாபய கூறியிருந்தார்.

சர்வதேச அமைப்பான, எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பும், உள்நாட்டு அமைப்பான சுதந்திர ஊடக இயக்கமும் கோத்தாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் இலங்கையின் ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல், அழுத்தம் எந்தளவில் இருக்கின்றன என்பதைப் புட்டுபுட்டு வைத்திருந்தன.

கோத்தாபய பதவியேற்றதும், தேர்தல் காலத்தில் அவருக்கு எதிராக இயங்கிய நியூஸ் ஹப் இணையத்தள பணிமனையினுள் புகுந்து பொலிஸார் தேடுதல் நடத்தினர். வெறுக்கத்தக்க பேச்சு அடங்கிய காணொலி இருப்பதாகத் தெரிவித்து தேடுதல் நடத்தப்பட்டாலும் எவையும் மீட்கப்படவில்லை. சில நாள்களில் மற்றொரு இணையத்தள ஊடக ஆசிரியர், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் பணியாளர் குழாமில் முன்பு பணியாற்றியவர், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் 4ஆம் மாடியில் பல மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இவற்றுடன் ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல் முடிவுக்கு வரவில்லை. சட்டவிரோத நடவடிக்கை தொடர்பில் அறிக்கையிட்ட பிரதேச ஊடகவியலாளர் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டிருந்தார்.

கோத்தாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்தால் ஊடகங்கள் அடக்கி, ஒடுக்கப்படும் என்று தேர்தல் காலத்தில் முன்வைக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் வகையில் அவரது ஆட்சி அமைந்துள்ளது. ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று ஊடகங்கள் சொல்லப்படுகின்றன. இலங்கையில் குறிப்பாக 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதிக்குள் ஊடகங்கள் எப்படி அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டன? ராஜபக்ஷாக்களின் ஆட்சிக் காலத்திலேயே ஊடக நிறுவனங்களுக்குள் புகுந்தும் தாக்குதல் நடத்தப்பட்டன. ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டனர். கொல்லப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டனர். வெளிநாடுகளுக்குத் தப்பியோடினர். இவ்வளவும் நடந்தன, கோத்தாபய பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்தபோதே.

இப்போது அவர் ஜனாதிபதியானதும், இந்த நிலைமைகள் திரும்புவதற்கு ஏதுவான பிள்ளையார் சுழியே இதுவரையிலும் போடப்பட்டுள்ளது. அதனைவிட, 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டுவரையில், ஊடகங்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணை அதிகாரிகளுக்கு, இந்த அரசு அழுத்தங்கள் மேல் அழுத்தங்களைப் பிரயோகித்தமையால், நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர். எஞ்சியுள்ள அதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளனர்.

அரசின் செயற்பாடு, ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்குத் தெம்பைக் கொடுக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. அவர்கள் மீண்டும் மீண்டும் ஊடகங்களைத் தாக்குவதற்கு அரசே அனுமதி கொடுத்ததைப் போன்று அமைகின்றது. இப்படியெல்லாச் சீத்துவக்கேட்டையும் செய்து விட்டு, எனது ஆட்சிக் காலத்தில் ஊடக சுதந்திரத்துக்கு எந்தவொரு அழுத்தமும் பிரயோகிக்கப்படாது என்று கோத்தாபய கூறுகின்றமை, பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை என்பது போன்றதே.




# 'ஓரேஞ்' குடையுடன் பெண்கள் ஊர்வலம்

வவுனியா, டிசெ.14

"சமத்துவமான தலைமுறை வன்புணர்வுக்கு எதிராய் எழுந்து நிற்போம்" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நிகழ்வு வவுனியாவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள், ஒரேஞ் நிறக் குடையுடன் வவுனியா மாவட்டச் செயலக முன்றிலிலிருந்து உள்ளக வீதியூடாக மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தை அடைந்தனர். அங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

வவுனியா மாவட்டச் செயலகம், பொஸ்டொ மற்றும், ஒஃப்பர் அமைப்பின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது.

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு தினமான நவம்பர் 25 தொடக்கம் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10 வரை தொடர்ச்சியாக 16 நாள்கள் பால்நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகளுக்கெதிரான பிரசாரமாக வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது உலகெங்கிலும் மக்கள் ஒன்றிணைந்து பெண்களுக்கும், சிறுமியருக்கும் எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருதல் தொடர்பாக வெளிப்படையாக பேசுவர். வன்முறைகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வன்முறைகளுக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் 16 நாள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் ரி.திரேஸ்குமார், நகரசபை உறுப்பினர், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொலிஸார், பெண்கள், சிறுவர்கள் கலந்து கொண்டனர். (க-ரி4,110)

# சின்ன வெங்காயத்தின் விலை மேலும் அதிகரிக்கும் அபாயம்

## குடாநாட்டு செய்கையாளர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

சின்ன வெங்காயத்தின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்வு கூறப்படுகிறது. நாடுமுழுவதும் கொட்டித்தீர்த்த மழை காரணமாக வெங்காயச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்ட நிலையிலேயே எதிர்காலத்தில் வெங்காயத்தின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், வெங்காயச் செய்கையாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். தாழ்ந்த இடங்களில் வெள்ளம் ஏற்பட்டதால் பயிரிடப்பட்ட வெங்காயங்கள் வெள்ளத்தில் மூழ்கி பழுதடைந்துள்ளன என்று பாதிக்கப்பட்ட செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

குடாநாட்டில், வலி. கிழக்கு பிரதேசத்தில் புன்னாலைக்கட்டுவன், ஈவினை, நவக்கிரி, ஊரெழு, நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, மாசிவன், இடைக்காடு போன்ற இடங்களில் விவசாயிகள் வெங்காய செய்கையில் ஈடுபட்டனர்.

மழை காரணமான தாழ்ந்த இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு அந்தப் பயிர்கள் பாதிக்கப்பட்டன. சின்ன வெங்காயப் பயிர் அழிவால் அவற்றின் விலைகள் மேலும் அதிகரிக்கலாம் என்று குடாநாட்டில் உள்ள சின்ன வெங்காயச் செய்கையாளர்கள் தெரிவித்தனர். அதிக விலை கொடுத்து விதை வெங்காயங்களைப் பெற்ற செய்கையாளர்கள் மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# மீள்குடியமர அனுமதிக்காத கிராமத்தில் மணல் அகழ்வு

பளை, டிசெ. 14

மிதிவெடிகள் அகற்றப்படவில்லை என்று தெரிவித்து மக்களை மீள்குடியமர அனுமதிக்காத கிராமத்தில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.


பளை முகமாலை இந்திராபுரம் கிராமத்திலே இவ்வாறு மணல் அகழ்வுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மழைவெள்ளத்தால் வழிந்தோடிய மணல் அயல் கிராமங்களில் உள்ளவர்களால் வாகனங்களில் தினமும் ஏற்றிச் செல்லப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

வெடிப்பொருள்கள் அகற்றப்படாத பகுதிகளில் நடமாட வேண்டாமென வெடிப்பொருள்கள் அகற்றும் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் வாகனங்களில் வருபவர்கள் அறிவிப்புகளையும் மீறி மணல் அகழ்வில் ஈடுபடுகின்றமை குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறும் இடங்கள் தொடர்பில், அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுக்கொண்டனர். (ஐ-9)

# மியன்மாருக்கு ஆயுதங்களை விற்பது சரியா?



மியன்மாருடன் இஸ்ரேல் கொண்டுள்ள உறவின் நெருக்கத்தை வெளிப்படுத்தும் வெளியுறவு ரீதியிலான விவகாரம் ஒன்று சமீபத்தில் இஸ்ரேலில் வெடித்துள்ளது. றொஹிங்கிய முஸ்லிம் சிறுபான்மையினர் படுகொலை செய்யப்படுகின்றமை குறித்து, அந்த நாடு தி ஹேக் நகரத்திலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணையை எதிர்கொண்டிருக்கும் சூழலில், இப்படிப்பட்ட விவகாரம் வெடித்திருக்கிறது.

பல ஆண்டுகளாக மியன்மாருக்கு அதிகாரபூர்வமாக ஆயுதங்களை இஸ்ரேல் விற்றுவந்திருக்கிறது. றொஹிங்கிய முஸ்லிம்கள் கும்பல் கும்பலாகப் படுகொலைகள் செய்யப்படுகின்றமை, பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றமை, றொஹிங்கிய கிராமங்கள் எரிக்கப்படுகின்றமை போன்றவை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் வந்த பிறகும், ஆயுத விற்பனையை ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்த பிறகும், மியன்மார் மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்த பிறகும் இந்த விற்பனை தொடர்ந்திருக்கிறது.



வழக்கறிஞர் எய்தாய் மாக்கின் தலைமையில் இஸ்ரேலின் மனித உரிமை செயல்பாட்டாளர்களின் சிறு குழுவொன்றின் தீவிரமான போராட்டத்துக்குப் பிறகே ஆயுத விற்பனைக்கு அதிகாரபூர்வமாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

ஆயுத விற்பனை நிறுத்தப்பட்டதாகத் தோன்றினாலும் இஸ்ரேலுக்கும் மியன்மாருக்கும் இடையில் குடிமக்கள் தொடர்பான துறைகளில் நெருக்கம் அதிகரித்தே வந்திருக்கிறது.

எடுத்துக்காட்டாக, 2018ஆம் ஆண்டு மே மாதம் இஸ்ரேலின் வெளியுறவுத்துறை மியன்மாருடன் கல்வி ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறது. இரண்டாம் உலகப் போரின்போது யூதர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்தும், இனவெறியை எதிர்கொள்வது குறித்தும் மியன்மாரின் பாடத்திட்டத்தில் அம்சங்கள் சேர்க்கப்பட்டிருப்பதுதான் வேடிக்கை.

தி ஹேக் நகரத்தில் தனது நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்வேன் என்று மியன்மாரின் ஆங் சான் சூச்சி அறிவித்திருந்தார். படுகொலைக்காகக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மியன்மாருக்கான இஸ்ரேல் தூதர் வாழ்த்துகள் அனுப்பியிருந்தார். 'அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கட்டும்' என்று இரண்டு முறை டுவிற்றரில் பதிவிட்டிருந்தார்.

இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று 'ஹாரெட்ஸ்' இதழ் வலியுறுத்திய பிறகே அவர் தனது ருவிற்றர் பதிவுகளை நீக்கியிருக்கிறார்.

இந்த ருவிற்களைப் பற்றிய செய்திக்குப் பிறகு மக்களிடமிருந்து கடும் விமர்சனம் எழுந்திருக்கிறது. அதைத்தொடர்ந்து, றொஹிங்கியா முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைக்கு எதிராக முதன்முறையாக அதிகாரபூர்வமான கண்டனத்தை வெளியுறவு அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்டது. தாமதமாக வந்தாலும் இது குறித்து தெளிவான கண்டனம் வந்திருப்பது நல்லதே.

ஆனால், மிளன்மார் என்பது இஸ்ரேல் ஆயுதத்தை விற்கும் கொலைகார அரசுகளுள் ஒன்று. இந்த விற்பனையைப் பற்றித் தகவல்கள் வெளிவந்துவிட முடியாத வகையில் தணிக்கையும் கடுமையான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன. தெற்கு சூடானில் இஸ்ரேலால் அதிகாரபூர்வமாக விற்பனை செய்யப்பட்ட துப்பாக்கிகளைக் கொண்டே படுகொலைகள் நிகழ்த்தப்படுகின்றன.

பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு ஆயுதம் விற்பனை செய்வதையும் செயல்பாட்டாளர்கள் கண்டித்துள்ளனர். பிலிப்பைன்ஸில் காவல்துறையினர் மீது கடுமையான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதேபோல் உக்ரைனில் உள்ள புதிய நாஜிக்கள் இஸ்ரேலிடமிருந்து ஆயுதங்களை வாங்கியிருக்கிறார்கள்.

இது குறித்த விவாதங்கள் பொதுவெளியில் நடக்கவிடாமல் செய்திருக்கின்றமை இஸ்ரேலின் பெரும் தார்மீகத் தோல்வி. இந்த இழிசெயல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

நன்றி : இந்து தமிழ் திசை



பல ஆண்டுகளாக மியன்மாருக்கு அதிகாரபூர்வமாக ஆயுதங்களை இஸ்ரேல் விற்றுவந்திருக்கிறது. றொஹிங்கிய முஸ்லிம்கள் கும்பல் கும்பலாகப் படுகொலைகள் செய்யப்படுகின்றமை, பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றமை, றொஹிங்கிய கிராமங்கள் எரிக்கப்படுகின்றமை போன்றவை தொடர்பான குற்றச்சாட்டுகள் வந்த பிறகும், ஆயுத விற்பனையை ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்த பிறகும், மியன்மார் மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்த பிறகும் இந்த விற்பனை தொடர்ந்திருக்கிறது.



# பால்மா விலை மாற்றமில்லை

## நுகர்வோர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.14

**இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான விலை குறைக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்திருந்தது. எனினும் அந்த விலை மாற்றப்படவில்லை என்று நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.**

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பால்மாவின் விலை குறைக்கப்பட்டது. அதனடிப்படையில் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 40 ரூபாவாலும், 400 கிராம் பால்மாவின் விலை 15 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அறிவித்திருந்தது. எனினும் இன்று வரை குடாநாட்டிலுள்ள பல வியாபார நிறுவனங்களில் பால்மாவின் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. 400 கிராம் பால்மாவின் விலை 390 ரூபாவுக்கும், ஒரு கிலோ பால்மாவின் விலை 985 க்குமே விற்பனை செய்யப்படுகிறது. பழைய பால்மா பைக்கற்றுக்கள் இருப்பில் உள்ளதால், புதிய விலையடங்கிய பால்மாப் பொதிகளை இன்னமும் இறக்குமதி செய்யவில்லை.

இறக்குமதியின் பின்னரேயே குறைக்கப்பட்ட விலையில் விற்பனை செய்ய முடியும் என்று விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

விலைக் குறைப்பு தொடர்பாக பால்மா விற்பனை முகவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வடமாகாணத்தின் பிற மாவட்டங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் நேற்றுச் சோதனைகள் இடம்பெற்றன என்று அதிகாரசபையின் வடமாகாண உதவி ஆணையாளர் ஏ.ஜே.சாதீக் உதயனுக்குத் தெரிவித்தார். (க-104)

## இந்தியாவிலிருந்து திரும்பிய குடும்பங்களுடன் சந்திப்பு

சாவகச்சேரி,டிசெ.14

இந்தியாவிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களு டனான கலந்துரையாடல் தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. ஒப்பர் ஸ்ரீலங்கா நிறுவனமும் தென்மராட்சிப் பிரதேச செயலகமும் இணைந்து கலந்துரையாடலை நடத்தின. பிரதேச உதவித் திட்டமிடல் அலுவலர் செ.சுபச்செல்வன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், நிறுவனப் பிரதிநிதிகள் கருத்துரைகளை வழங்கினர்.

அத்துடன் இந்தியாவிலிருந்து திரும்பிவந்து மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்குத் தற்காலிக இருப்பிடங்கள் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. (க-9)

## பரிசளிப்பு நிகழ்வு



யாழ்ப்பாணம்,டிசெ.14

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகர பொதுசன நூலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து கொண்டார்.

போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், சிறார்களுக்கும் இதன் போது பரிசில்கள் வழங்கி அவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. மேலும் நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் து.ஈசன், மாநகர ஆணையாளர், மாநகர பிரதி ஆணையாளர், மாநகரசபை உறுப்பினர்கள், நூலகத்தின் பிரதம நூலகர், மாநகர உத்தியோகத்தர்கள், போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள், வெற்றியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ)

## வாசிப்பு மாத நிகழ்வு

மானிப்பாய்,டிசெ.14

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு இன்று சனிக்கிழமை சபையின் மானிப்பாய் கலாசார மண்டபத்தில் பிற்பகல்1.30மணிக்கு நடைபெறவுள்ளது. வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பணம் மாவட்ட மேலதிக செயலர் (காணி) சு.முரளீதரன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட உதவி மாவட்ட செயலர் வி.சிவராஜா, சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன் மதிப்புறு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி பஞ்சாட்சரம் கணேசன், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ்.கிந்துஷா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதேவேளை இந்த நிகழ்வின்போது பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (ஜ)

## கல்வி அமைச்சருடன் சாதனையாளர்கள் சந்திப்பு







யாழ்ப்பாணம்,டிசெ.14

2019 ஆண்டுக்கான 16 ஆவது சர்வதேச கணித மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வெற்றி பெற்ற வடக்கு மாகாணம் உள்ளிட்ட ஏனைய பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிகாரிகள் கல்வி அமைச்சரை நேற்று முன்தினம் அமைச்சில் சந்தித்தனர்.

இந்தப் போட்டியில் விஞ்ஞான பிரிவில் தங்கப்பதக்கம் ஒன்றும், வெள்ளிப் பதக்கம் ஒன்றும், வெண்கலப் பதக்கங்கள் மூன்றும் இலங்கை மாணவர்களுக்குக் கிடைத்தன. கணிதப்பிரிவில் 5 வெண்கலப்பதக்கங்களை மாணவர்கள் பெற்றனர்.

வடக்கு மாகாணம் சார்பாக வவுனியா தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மியூரன் ஜதுர்ஷன் விஞ்ஞான பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த சப்தஹி செந்தூரன் விஞ்ஞானப் பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மெனுஷா சிவகுமார் கணிதப்பிரிவில் வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். சர்வதேச கணித மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் இம்முறை 26 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அமைச்சர் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (க-7)

## கிராம அலுவர் சங்கம் பதிவு

மூளாய்,டிசெ.14

யாழ்ப்பாணம் மாவட்ட கிராம அலுவலர் சங்கத்தைப் பதிவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

கடந்த வாரம் சங்கத்தைப் பதிவு செய்வது தொடர்பாக தொழில் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்டது. அத்துடன் தொழில் சட்டங்கள் தொடர்பான கருத்தமர்வு சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களுக்கு நடத்தப்பட்டது. அடுத்த கட்டமாக பதிவுக்குத் தேவையான ஆவணங்களைத் தொழில் திணைக்களத்துக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த பல வருடங்களாக இந்தச் சங்கம் பதிவுக்குட்படுத்தப்படாமையால் நடைமுறையில் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-121)

## தடை நீக்கம்

மூளாய்,டிசெ.14

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடைநிறுத்தி வைக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களின் வகுப்புக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வேகமாகப் பரவிவரும் டெங்குத் தொற்றுக் காரணமாக தனியார் கல்வி நிலையங்களில் இடம்பெற்று வந்த வகுப்புக்கள் அனைத்தும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தன.

அடுத்த ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்கான வகுப்புகளை மட்டும் நடத்துவதற்குத் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் வகுப்புக்களை நடத்தமுடியும் என்று மாவட்டச் செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (க-121)

# மேய்ச்சல் தரையில்லை அலையும் கால்நடைகள்

மன்னார்,.டிசெ.14

மன்னாரில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை ஒதுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அதிகாரிகள் இந்த விடயத்தில் அசமந்த போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர் என்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

மன்னார் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. அதில் கால்நடை மேய்ச்சல் தரை சம்பந்தமாக ஆராயப்பட்டது.

முசலி பிரதேச செயலர் பிரிவில் சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் அந்தப் பகுதியிலுள்ள கஜீ பகுதி மேய்ச்சல் நிலத்துக்குக் கொண்டுச் சென்று பராமரிக்கப்பட்டு வருகின்றன. தேர்தலுக்குப் பின்னர் கால்நடைகளை அந்தப் பகுதிக்குக் கொண்டு செல்ல கடற்படையினர் தடை விதித்துள்ளனர்.

முசலிப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு ஒரு வாழ்வாதாரமாகவுள்ளது. எனவே விரைவில் கால்நடைக்கான மேய்ச்சல் நிலத்தை அடையாளப்படுத்த வேண்டும் என்று மக்கள் சுட்டிக் காட்டினர்.

கடற்படையின் சிவில் அதிகாரி மற்றும் பிரதேச செயலர், மாவட்டச் செயலக அதிகாரிகள் இந்த விடயமாகக் கலந்துரையாடி கால்நடை வளர்ப்போருக்கு உதவி புரிய வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. நானாட்டான் பகுதி கால்நடைகளுக்கு முருங்கன் பகுதியில் மேய்ச்சல் நிலம் இனம் காணப்பட்ட போதும், அந்தப் பகுதியில் கால்நடைகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை காணப் படுகின்றது.

அங்கு சட்டவிரோத விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதே இதற்குக் காரணம் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (க-60)



## உணவுப் பொருள்கள் கையளிப்பு

முல்லைத்தீவு.டிசெ.14

போரால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்த முன்னாள் போராளிகள் 50 பேருக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு உடையார்கட்டு ஒளிரும் வாழ்வும் அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பிரித்தானியா நயினை மணி மேகலை முன்னேற்றக் கழகத்தின் நிதி உதவியில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)



## ஹெரோய்ன் பைக்கற்றுக்களை வைத்திருந்தாரென இளைஞன் கைது

மன்னார், டிசெ. 14

ஹெரோய்ன் போதைப் பொருள் பைக்கற்றுக்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மன்னார் தோட்டவெளிப் பகுதியில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரிடமிருந்து 5 ஹெரோய்ன் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அதே இடத்தைச் சேர்ந்த 19 வயதுடையவரே கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜோசப்வாஸ் நகர் தோட்ட வெளிப் பகுதியில் அவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார். அவ்ரைச் சோதனையிட்டபோதே ஐந்து சிறிய பைக்கற்றுக்களில் ஹெரோய்ன் போதைப் பொருள் காணப்பட்டது என்றும் மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். (கு-213)

## பண்பாட்டு விழா





முல்லைத்தீவு.டிசெ.14

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தின் பண்பாட்டு விழா தண்ணீரூற்று ஐங்கரன் மண்டபத்தில் அண்மையில் சிறப்புற இடம்பெற்றது.

தண்ணீரூற்றுச் சந்தியில் இருந்து மாணவர்களின் நடன நிகழ்வுகள் மற்றும் பாரம்பரிய ஊர்திப் பவனியுடன் விருந்தினர்கள் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

பிரதேசத்திலுள்ள கலைஞர்களின் வரலாற்று நாடகங்கள் இடம்பெற்றன. அத்துடன் கலைஞர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தைச் சித்திரிக்கும் வகையில் சிலம்போசை நூல் மாவட்டச் செயலரால் வெளியிடப்பட்டது. கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் மணிவண்ணன் உமாமகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் திணைக்களங்களின் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (க-70)





வடலியடைப்பு ஆராதனா தையல் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ஐ-50)



## 38 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள்

முல்லைத்தீவு,டிசெ.14

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை நிவாரணம் கிடைக்கப்பெறாத 38 குடும்பங்களுக்கு உதவிப்பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன விதையனைத்தும் விருட்சமே செயற்பாட்டு குழுவுடன் இணைந்து இந்த உதவிகளை வழங்கின.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இந்துபுரம், பனிக்கன்குளம், பேராறு கிராமப் பிரிவுகளில் உள்ள 38 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள், நுளம்பு வலை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர், நிர்வாக உத்தியோகத்தர், இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர், கிராம அலுவலகர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இளைஞர் கழகத் தலைவர்கள் எனப் பலரும கலந்து கொண்டனர். (ஐ-222)

## பச்சிலைப்பள்ளியின் பாதீடு நிறைவேறியது

கிளிநொச்சி, டிசெ. 14

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மேலதிக 3 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. 5கோடியே 55இலட்சத்து 10ஆயிரத்து முந்நூறு ரூபா அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் சிறுவர் நலன்புரி சேவை, முதியோர் நலன்புரி சேவை, தாய் சேய் பராமரிப்பு சேவை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி, மயான அபிவிருத்தி, பொதுப்போக்குவரத்து மற்றும் பொதுவீதி அபிவிருத்தி, குடிதண்ணீர் ஏனைய அத்தியாவசிய தேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல், பிரதேச வீதிகளுக்கான ஒளியூட்டல் சேவை, பிரதேசத்தில் இடர் கர்லத்துக்கான உதவிகள், கலை கலாசாரத்தை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள், வலுவிழந்தோருக்கான உதவித் தொகை தொடர்பான ஏற்பாடுகள், பெண்கள் முதியோர் அபிவிருத்தி தொடர்பான ஏற்பாடுகள், ஏனைய அடையாளப்படுத்தப்பட்ட மூலதனச் செலவுகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரகுமாருடைய சுயேட்சைக்குழுவின் 4உறுப்பினர்களில் மூன்று உறுப்பினர்களும் வரவு-செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரகுமாரின் சுயேச்சைக்குழுவின் ஓர் உறுப்பினர் ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர். (கு-6)

# 021 222 5000

# டெங்குவா? அழையுங்கள்!

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்த அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



யாழ். மாவட்டச் செயலகத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

அதில் பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சித் திணைக்களங்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், வீட்டுக் கழிவுப் பொருள்களை உரிமையாளர்கள் அற்ற காணிகளில் வீசுதல் மற்றும் இறந்த உயிரினங்களின் உடல்களை வீசுபவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அத்துடன் மாநகர சபை மற்றும் உள்ளூராட்சித்திணைக்களங்களால் கழிவகற்றும் நடவடிக்கைகள், குப்பைகளை வீதிகளில் போடுபவர்களுக்கு அதற்கான விழிப்புணர்வுகளை முன்னெடுக்கும் செயற்பாடுகள் எதிர்வரும் 3 வாரங்கள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளன என்ற விடயமும் ஆராயப்பட்டது.

இதன் போது பிரதேச செயலர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், கழிவகற்றல் மற்றும் டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், ஆளணிப் பற்றாக்குறை தொடர்பாகவும் சுட்டிக் காட்டினர்.

வீதிகளில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனைகள் மற்றும், வீதிகளில் இவற்றை, டெங்கு நுளம்புப் பெருக்கங்கள் உருவாகின்றன. அதனைப் பொது மக்கள் விழிப்புணர்வின்றி வீதிகளில் வீசுவதனால், டெங்கு நுளம்பு பெருக்கெடுக்கிறது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அதேவேளை டெங்கு தொடர்பான முறைப்பாடுகளை 021 222 5000 என்ற அவசர இலக்கத்துக்கு தெரிவிக்க முடியும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர், யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட மேலதிக செயலர், பிரதேச செயலர்கள், உள்ளூராட்சித் தலைவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்து கொண்டனர். (க-106)

## பிரதேச செயலகத்தில விசேட அலகு திறப்பு

சாவகச்சேரி,டிசெ.14

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பி தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்களின் நலன் கருதி, தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் விசேட அலகு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான அலுவலரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதேச செயலகத் திட்டமிடல் கிளையில் அலகு இயங்கும். 0212271014 மற்றும் 076636 3131 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். (க)

## சிறுவர் மகிழ்களம்

சாவகச்சேரி,டிசெ.14

நுணாவில் கனடா அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில்,நுணாவில்மேற்கு கொல்லங்கிராய் பிள்ளையார்ஆலயச்சூழலில் சிறார் மகிழ்களம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்குஇடம்பெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன்சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் தேவந்தினி பாபு, மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஆர். ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்வர்.(க-9)

## வர்த்தகர்களுக்கு தெளிவூட்டல்

வவுனியாவில் டெங்குத் தொற்று அதிகரித்து வருவதை அடுத்து, அதனைக் கட்டுப்படுத்த சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவு மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக வர்த்தகர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வு, வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் நேற்று இடம்பெற்றது.

இதில் வவுனியாவைச் சேர்ந்த வர்த்தகர்கள், மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்பங்குபற்றினர். டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாக வர்த்தகர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (க-110)

## நூல் அறிமுகம்

வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய.வெற்றிக்கு வலிகள் தேவை நூல் அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமைமாலை 4 மணிக்கு காலையடி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தின் பணிப்பாளரும், மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான சு. சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், நூல்அறிமுகஉரையை மூத்த சட்டத்தரணி சோ. தேவராஜாவும் கருத்துரையை வளரி கவிதை இதழின் பொறுப்பாளர் அழ. பகீரதனும், ஏற்புரையை நூல் ஆசிரியர் வள்ளியம்மை சுப்பிரமணியம் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (க)

## லயன்ஸ் கழகத்தால் நிவாரணம் வழங்கல்

நெல்லியடி,டிசெ.14

வடமராட்சி கிழக்கில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன..

நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், உணவுப் பொருள்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டன.

வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணி, வத்திராயன்.உடுத்துறை ,ஆழியவளை ஆகிய கிராமங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவை வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தினர் நெல்லியடி வட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்கள் இணைந்து பொருள்களை வழங்கினர். (க-70)





## கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் பாலர் பாடசாலைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த மருத்துவர் சுகுமார் நாகேந்திரனின் நிதியுதவியுடன் இராணுவத்தின் 12 ஆவது கெமுனு சேவைப்படையணி மற்றும் 5 ஆவது பொறியியல் சேவைப் படையினர் ஆகியோர் இணைந்து இந்தக் முன்பள்ளிக் கட்டடத்தை அமைத்துள்ளனர்.

நிகழ்வில் 523 ஆவது படைத் தலைமையகத்தின் தளபதி கேணல் ரொஹான் ராஜபக்ஷ.மருத்துவர் சுகுமார் நாகேந்திரன், இராணுவ உயரதிகாரிகள், ஆசிரியர்கள், சிறுவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## வினாத்தாள் திருத்தல் டிசெம்பர் 24 ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ 14

2019 ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 2 ஆம் திகதி முதல் 12 ஆம் வரை பரீட்சைகள் நடைபெற்றன. பரீட்சைகள் தற்போது நிறைவடைந்த நிலையில் வினாத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

முதல் கட்ட வினாத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வரையும், இரண்டாம் கட்ட வினாத்தாள் திருத்தும் பணிகள் ஜனவரி 17 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறும்.

2019 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் இருந்து 51 ஆயிரத்து 474 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். உஇதில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் 24 ஆயிரத்து 669 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 26 ஆயிரத்து 805 பேரும் தோற்றினர். (க-7)

## இரண்டு அதிபர்களுக்கு குரு பிரதீபாபிரபா விருது

சாவகச்சேரி,டிசெ.14

மாகாண சாதனையாளர் மதிப்பளிப்பு மற்றும் விருது வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

வடமாகாணகல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள நிகழ்வில், தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த இரண்டு பாடசாலைகளின் அதிபர்களுக்கு குரு பிரதீபபிரபா விருது வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு, சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலய அதிபர் க.மகிந்தன் ஆகியோர் விருதுகளைப் பெறவுள்ளனர்.

கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு தேசிய நிலையில் இந்த வருடத்துக்கான குரு பிரதீபாபிரபா விருதுக்குத் தேர்வுசெய்யப்பட்டு அண்மையில் கொழும்பில் விருது பெற்றார். (க-9)

## பரிசளிப்பு

வவுனியா,டிசெ.14
வவுனியாப் பொதுநூலகத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நகர சபை மண்டபத்தில் நடைபெறும்.
நகர சபைத் தலைவர் இ.கௌதமன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதமவிருத்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். பற்றிக்டிறஞ்சன் கலந்துகொள்வார். (க-288)



## ரயில் மோதி யானை சாவு

வவுனியா, டிசெ. 14
வவுனியாவில் ரயில் மோதியதில் யானை உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா செட்டிகுளம் பீடியா பண்ணைப் பகுதியில் நேற்று அதிகாலை 2.30 அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்த ரயில்மோதி அது உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டது. யானை தண்டவாளத்தில் நின்றிருந்தது என்று ரயிலில் பயணித்தவர்கள் கூறினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதுபற்றி வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் யானையைப்பார்வையிட்டு, அதை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். (த-110)

### பளை மருத்துவமனையின்

# நோயாளர் விடுதிகள் மூடப்படும் ஆபத்து!

### மருத்துவர் பற்றாக்குறையை உடன் நிவர்த்திக்க வேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 14

ஏ- 9 வீதியிலுள்ள பளை பிராந்திய மருத்துவமனையில் மருத்துவர் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் மருத்துவரும் பணியிலிருந்து விலகுவாராக இருந்தால் மருத்துவமனையில் நோயாளர் விடுதிகளை மூடிவிட்டு ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையமாக மட்டுமே இயக்கவேண்டிய நிலை வரும் என்று பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிக்கிறார். மருத்துவர்களை நியமிக்குமாறு அடிக்கடி கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கின்றபோதும் அமைச்சு கண்டுகொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

குறித்த மருத்துவமனையில் மருத்துவர் பற்றாக்குறையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்த மருத்துவமனைக்கு 3 மருத்துவர்கள் கடமையில் ஈடுபடவேண்டும். அவ்வாறிருக்க மருத்துவ அத்தியட்சகராக இருந்த சி.சிவரூபன் கைது செய்யப்பட்ட பின்னர் தற்போது ஒரேயொரு மருத்துவரே அங்கு கடமைபுரிகிறார். அவரைவிட ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற மருத்துவர் திருமதி ஏகாம்பரமூர்த்தி பத்மராணி பணிபுரிகிறார். இவர் பணியிலிருந்து விலகுவாராயின் மருத்துவமனையின் நோயாளர் விடுதிகளை மூடவேண்டிய நிலை ஏற்படும். இத்தகைய நிலை ஏற்பட்டால், ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையமாகவே இதை இயக்கவேண்டிவரும் என்று பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்.
இவ்வாறு விடுதிகளை மூடினால், பளை மட்டுமன்றி மருதங்கேணியிலிருந்து வரும் நோயாளர்களும் அவதிப்படுவர். அதற்கு இடம்கொடுக்கமுடியாது, தமக்குத்தான் பாதிப்பு என்று நோயாளர்கள் கூறுகின்றனர். ஆனால் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை நீடித்துக்கொண்டிருக்கின்றது.
இங்கு மட்டுமல்ல, கிளிநொச்சிப் பிராந்தியத்திலுள்ள உருத்திரபுரம், வட்டக்கச்சி, கண்டாவளை உள்ளிட்ட மருத்துவமனைகளிலும் மருத்துவர் பற்றாக்குறை நீடித்துக் கொண்டிருக்கின்றது. இந்தநிலை பற்றி கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மருத்துவர்களை நியமிக்கவில்லை என்றும் பிராந்தியப் பணிப்பாளர் கூறுகின்றார்.
“3 மருத்துவர்கள் பணியிலிருக்கவேண்டிய நிலையில், ஓய்வுபெற்ற மருத்துவரும் நானுமே நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கிவருகின்றோம். டெங்கு, தொற்று நோய், முட்டு என்றவாறு பல வகை நோயாளர்கள் வருவர்.
இவற்றைவிட விபத்துக்களில் சிக்கியும் வருவார்கள். இவ்வளவு பேருக்கும் சிகிச்சை வழங்கும்போது நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது.” என்று பளை மருத்துவமனையின் பதில் பொறுப்பு மருத்துவர் கூறுகின்றார்.
“ஆனால் நோயாளர்கள் இவற்றை எந்தளவுக்குப் புரிந்துகொள்வார்களோ தெரியாது. தேவையேற்படின் நோய் நிலைகளைப் பொறுத்து சில நோயாளர்களை கிளிநொச்சி அல்லது ஆதார மருத்துவமனைகளுக்கு மாற்றவேண்டும். அவ்வாறு மாற்றாது விடின் நோயாளர்களுக்குத்தான் ஆபத்தாக மாறும். சிக்கல் வந்தால் எங்களிடமே கேள்விவரும். இதை நோயாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். மருத்துவமனைகளுக்குத் தரப்படாத மருந்துகள் சில உள்ளன. நோய் குணமாகவேண்டுமெனின், மருத்துவமனையிலுள்ளவற்றைவிட தனியார் மருந்தகங்களில்தான் சில மருந்துக்ளைப் பெறவேண்டியுள்ளது. அவற்றை எழுதிக் கொடுப்பதுகூட நோயாளர்கள் விரைவில் குணமாகவேண்டும் என்பதற்காகவே. தேவைகளைப் பொறுத்தே அவற்றை எழுதிக் கொடுக்கின்றோம். இன்னும் இரண்டு மருத்துவர்களை நியமித்தால் சிகிச்சைகளை இரவு பகலாகச் சிறப்பாக வழங்க முடியும்.” என்றும் அவர் தெரிவித்தார்.
மாவட்டத்தில் மருத்துவர்களுக்கான பற்றாக்குறையின் தாக்கம் கடுமையானதாகவுள்ளது. நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றமையை கொழும்பு சுகாதார அமைச்சு கவனத்தில்கொண்டு உரிய நடவடிக்கையை விரைந்து எடுக்கவேண்டும் என்பதே நோயாளர்களின் கோரிக்கையாகவுள்ளது. (து)



## கொழும்புத்துறைக்குக் களப் பயணம்

யாழ்ப்பாணம்,டிசெ.14
யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதிக்கு நேற்று களப் பயணம் ஒன்றை மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் மேற்கொண்டார்.
டெங்கு உற்பத்திக்கு ஏதுவாக காணப்பட்ட இடங்களை அடையாளம் செய்து அதனை அப்புறப்படுத்தும் முகமாக இந்தப் பயணம் மேற்கொள்ளப் பட்டது எனத் தெரி விக்கப் பட்டது. இதன்போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்ட துடன் அவற்றை உடனடியாக அகற்று வதற்கும் முதல்வரால் உத்தரவிடப்பட்டது. (ஐ)

### மழையால் பாதிக்கப்பட்டோருக்கு

## உதவிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.14
யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் பெய்த கடும் மழையால், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கத்தவர்கள் தொழில் இன்றிப் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.
அவர்களுக்கான் வாழ்வாதார உதவிப் பொருள்களை சங்கங்கள் மூலமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணித் தலைவர் எஸ். செல்வராசா தெரிவித்தார்.
ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் பாதிக்கப்பட்ட நிதியாக இரண்டாயிரத்து 500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கப்படும். அரிசி,சீனி, மா,பருப்பு உள்ளடங்கிய உலர் உணவுப் பொதிகளை பனை,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும். (க-17)



## கரோல் போட்டியில் முதலாம் இடம்

வவுனியா,டிசெ.14
தேசிய ரீதியான கிறிஸ்மஸ் கரோல் தமிழ்ப் பாடல் போட்டியில் வவுனியா புனித சூசையப்பர் ஆலயத்தின் குழுப்பாடகர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். கொழும்பு றாகம புனித பேருதுவானவர் மற்றும் பவுலடியார் பேராலயத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிறிஸ்மஸ் கரோல் பாடல் போட்டிகள் நடத்தப்பட்டன. அதில் தமிழ் பாடல் போட்டியில் வவுனியா வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலய குழுப்பாடகர் குழு முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (க)



## வீதியின் நடுவே பழுதடையும் பேருந்துகள்

*மக்கள் விசனம்*

வடமராட்சி, டிசெ.14

பருத்தித்துறை மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்துவடமராட்சிகிழக்கு நோக்கிப் புறப்படுகின்ற அரச பேருந்துகள் அதிகமாக இடைநடுவில் பழுதடைகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

பழைமையான பேருந்துகளை அந்த வழித்தடத்தில் ஈடுபடுத்துத்துகின்றமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. அவ்வாறு பழுதடையும் பேருந்துகளைச் சரிசெய்து நகர்த்திச் செல்வதிலும் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனால் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர். நீண்ட தூரம் சேவையில் ஈடுபடும் வழிதடங்களில் புதிய பேருந்துகளை சேவைக்கு அமர்த்துமாறு மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நேற்றைய தினம் உடுத்துறை ஐந்தாம்பனை பிள்ளையார் ஆலயத்துக்கும் உடுத்துறை மீன் சந்தைக்கும் இடைப்பட்ட கரையோர வீதியிலும் அரச பேருந்து பழுதடைந்து நின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. வடமராட்சிக் கிழக்கு மக்களின் பல்வேறு தேவைகளையும் கருத்தில் கொண்டு அவர்களுடைய போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்படாதவாறு பேருந்துச் சேவையை மேற்கொள்ள இலங்கை போக்குவரத்து சபையினர் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்க ப்பட்டது. (ஐ-70)

# பண்பாட்டுப் பெருவிழா

*கிளிநொச்சி டிசெ. 14*

*கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா நேற்று சிறப்பாக இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்டச் செயலராக இருந்து பதவி உயர்வு பெற்று இராஜாங்க அமைச்சின் செயலாளராகக் கடமையேற்றுள்ள சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலக திறண் விருத்தி மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.*





வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டு பேரவைஆகியவற்றுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

பிள்ளையார் ஆலயம் முன்பாக ஆரம்பமான பண்பாட்டு பேரணியானது பாரம்பரிய பண்பாட்டை எடுத்தியம்பும் வகையில் சிறப்பாக இடம் பெற்றது.

மயிலாட்டம், கோலாட்டம் உள்ளிட்ட பண்பாட்டு கலை அம்சங்களுடன், தமிழ் வளர்த்த பாரதி உள்ளிட்ட பெரியார்களின் காட்சிகளுடன் பேரணி சிறப்பாக விழா மண்டபம் வரை வருகைதந்ததைத்தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் தமிழ் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டதுடன் மங்கல வாத்திய நிகழ்வுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பண்பாட்டு விழுமியங்களை எடுத்தியம்பும் கலை நிகழ்வுகளும் அரங்கை அலங்கரித்தன.

தொடர்ந்து கிளிநொச்சி பண்பாட்டலுவல்கள் பேரவையினால் வழங்கப்படும் அதி உயர் விருதான கலைக்கிளி விருதுகள் நால்வருக்கு வழங்கப்பட்டன. கலைத்துறையில் அதிக காலம் ஈடுபட்டமைக்காக வருடம் தோறும் இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து இளம் கலைஞர்கள், கலைத்துறை சாதனையாளர்கள் உள்ளிட்டோருக்கான விருதுகளும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாவட்டக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட ஓவியக் கண்காட்சியும் திறந்து வைக்கப்பட்டது.

"கிளிநொச்சி மாவட்ட மக்கள் பண்பாட்டுக்கு அடிமையானவர்கள். பண்பாட்டைப் பேணி பாதுகாப்பதற்காக அதிகம் உழைப்பவர்கள். இருந்தும் இதுவரை பண்பாட்டை ஊக்குவித்தது போன்று அடுத்து வரும் சந்ததியினருக்கும் அழைத்து செல்லும் வகையில் அதிகம் செயற்பட வேண்டும் என்று நிகழ்வில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், துறைசார் அதிகாரிகள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-6)



## மைதானம் சீரமைப்பு

கிளிநொச்சி,டிசெ.14

கிளிநொச்சி அழகாபுரி கிராமத்தில் உள்ள இராமநாதபுரம் பொது விளையாட்டு மைதானத்தின் சீரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அழகாபுரி விளையாட்டுக் கழகத்தால் விடப்பட்ட கோரிக்கைக்கு அமைய கரைச்சிப் பிரதேச சபை இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

## மனித உரிமைகள் பற்றி விழிப்பூட்டும் கருத்தமர்வு

மன்னார், டிசெ. 14

மன்னார் மாவட்ட விழுது மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் 'சர்வதேச மனித உரிமைகள்' தினத்தையொட்டி விழிப்புணர்வுக் கருத்தமர்வு மன்னாரில் நேற்று நடைபெற்றது.

மன்னார் மாவட்ட விழுது மேம்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ஜெகநாதன் டலிமா தலைமையில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் பெண்கள் சமாசம், இளையோர் மற்றும் கிராம மட்டத்தலைவர்கள் கலந்துகொண்டனர்.

'சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்களையும், விரிவுரைகளையும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் மற்றும் நிறுவன அபிவிருத்தி ஆலோசகர் நிக்ஸன் றோச் ஆகியோர் நிகழ்த்தினர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் முன்வைத்திருந்தனர். (த-56)



# ரூ 9 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி,டிசெ.14

சீவல் வெற்றிலையுடன் புகையிலைத் துண்டு வைத்து நுகர்வோருக்கு வழங்கிய தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 18 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் தலா 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் அதிகாரிகள் கடந்த புதன்கிழமை நடத்திய பரிசோதனையின்போது, வர்த்தகர்களை இனம் கண்டனர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகள் நேற்று நீதிமன்றில் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## மதிப்பளிப்பு

சாவகச்சேரி,டிசெ.14

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில், சாதனையாளர்களுக்கானமதிப்பளிப்பும் சான்றிதழ் வழங்கலும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தென்மராட்சிக் கலைமன்றக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வலயக் கல்விப்பணிப்பாளர் த.கிருபாகரன்தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக பொருளியற்றுறை மூத்த விரிவுரையாளர் எஸ் எஸ் உதயகுமார், சிறப்பு விருந்தினராக பேராதனைப் தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்சோ.கோகுலன் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில்வலய, மாகாண, தேசிய நிலைகளில் சாதனைகள் படைத்த தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர். (க-9)

## கலை விழா

யாழ்ப்பாணம்,டிசெ.14

பொற்பதி அறிவாலயம் நடத்தும், சரஸ்வதி முன்பள்ளியின் 34 ஆவது மற்றும் பொற்பதி இந்து அறநெறிப்பாடசாலையில் 8 ஆவது கலைவிழா கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள பொற்பதி அறிவாலயத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும். அறிவாலயத் தலைவர் சண் வாமதேவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், வடக்கு அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் யோகநாயகம், யாழ்.கல்வி வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

## இரங்கல் கூட்டம்

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் சே. ஏகாம்பரநாதனின் மறைவு குறித்த இரங்கல்கூட்டம்பாடசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய பழைய மாணவர் சங்கமும் பாடசாலை சமூகமும் இணைந்து அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (ஐ-173)

# பொதுத்தேர்தல் வெற்றி அரசின் நோக்கம் அல்ல

## இராஜாங்க அமைச்சர் செனவிரத்ன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

**பொ**துத் தேர்தலின் வெற்றியைக் கருத்திற் கொண்டு இடைக்கால அரசு தற்போது செயற்படவில்லை. தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பல பொதுத் தேர்தலுக்கு முன்னர் செயற்படுத்தப்படும்.



இவ்வாறு பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் வாழ்க்கைத் தரம் தற்போது உயர்வடைந்துள்ளதுடன் நாளாந்த செலவுகளும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன.

அதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இறக்குமதி செய்யப்படும் உற்பத்திகளுக்குத் தற்போது பெரும் கேள்வி நிலவுகின்ற பட்சத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பொருள்களின் விலையும் அதிகரித்த மட்டத்தில் காணப்படுகின்றன.

வாழ்க்கைச் செலவுகள் குறித்து ஆராயும் குழுவின் பரிந்துரைகளுக்கு அமையத் தற்போது பல்வேறு அத்தியாவசிய பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது. அரிசி உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்க அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அடுத்த மாதம் தொடக்கம் விலைக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும்.

ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியைத் தொடர்ந்து பொதுத் தேர்தலின் வெற்றியை இலக்காகக் கொண்டு பொருள்களின் விலை குறைக்கப்படவில்லை.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அடி மட்டத்தில் இருந்து துரிதமாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ உறுதியாக உள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் முழுமையாக நிறைவேற்றப்படும். இடைக்கால அரசில் மக்களுக்கு பயன்பெறும் பல விடயங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அதன் பலன் மக்களுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் முழுமையாகக் கிடைக்கும் -என்றார். (எ)

# கடற்றொழில் அபிவிருத்திக்கு நோர்வேயிடம் உதவிகோரல்

கொழும்பு,டிசெ.14

கடற்றொழில் சார் செயற்பாடுகளில் பின்தங்கியிருக்கும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்திக்குப் பெரும் திட்டங்களை எதிர்பார்த்துள்ளார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நோர்வே அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் றைனா ஜொனான்லி எஸ்கெட்ல் தலைமையிலான குழுவினர், மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சரை நேற்றுச் சந்தித்தனர்.

நாடளாவிய ரீதியில் கடற்றொழில் சார் அபிவிருத்திக்கு நோர்வே மேற்கொண்டு வருகின்ற வேலைத் திட்டங்களுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் அந்த உதவிகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

அதற்குப் பதிலளித்த நோர்வே தூதுவர், இலங்கையில் படகு கட்டும் தொழில் துறையிலும் அதேபோன்று நன்னீர் மற்றும் குளம், களப்பு போன்ற நீர் நிலைகளில் கடல் உற்பத்திகளை அதிகரிப்பது தொடர்பாகவும் ஆர்வம் செலுத்தி வருவதுடன், அந்தத் திட்டம் வெற்றியடையும் பட்சத்தில் தனியார் முதலீட்டாளர்களை அழைத்து வருவதற்கும் தயார் - என்றார். (க-ரி1)

# நோட்டன்பிரிஜ் வீட்டில் வெடிபொருள்கள் மீட்பு

கொழும்பு, டிசெ.14

நோட்டன் பிரிஜ் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து ஒரு தொகை வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கினிகத்ஹேன தியகல ஊடான மஸ்கெலிய பிரதான வீதியின் சீரமைப்புப் பணியாளர்கள் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டின் ஓர் அறையில் இருந்தே வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

வீட்டில் இருந்து 21 டெட்டனேட்டர்கள், வெடிபொருள்கள் 70 கிராம், அமோனியம் 2 கிலோ 100 கிராம் மற்றும் கிரேனைட் குச்சிகள் என்பவையே கைப்பற்றப்பட்டன என்று கூறப்படுகின்றது.

வீட்டில் இருந்தவர்கள் வீட்டை விட்டுச் சென்றதன் பின்னர் வீட்டைச் சுத்தம் செய்யச் சென்ற உரிமையாளரால் வெடிபொருள்கள் இனங் காணப்பட்டுப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் நோட்டன்பிரிஜ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பசுமைநீலதிட்டத்துக்கு சீன அரசால் உதவிகள்

கொழும்பு, டிசெ.14

கடற்படையின் பசுமை நீல மற்றும் நீலச் சுற்றாடல் கருத் திட்டத்துக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் சீன அரசால் இலங்கைக் கடற்படைக்கு 50 துவிச்சக்கர வண்டிகளும் 3 மின்சார வண்டிகளும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

கடற்படைத்தலைமையகத்தில் இடம்பெற்ற வைபவத்தில் அவை வழங்கப்பட்டன. இந்த நன்கொடைப் பொருள்களை சீனத் தூதரகத்தின் கடல் மற்றும் விமானப் படை பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் சாங்குவான் ஜிங் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டி சில்வாவிடம் கையளித்தார். சீன மக்கள் குடியரசால் வழங்கப்பட்ட துவிச்சக்கர மற்றும் மின்சார வண்டிகளை திருகோணமலை கடற்படை இறங்குதுறைப் பிரதேசத்தில் ஈடுபடுத்துவதற்குக் கடற்படை உத்தேசித்துள்ளது. திருகோணமலை கடற்படை இறங்குதுறைப் பிரதேசமானது கடற்படையால் முன்னெடுக்கப்படும் சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டமான "நீல ஹரித சங்க்ராமய" திட்டத்தில் உள்ளடங்கும் பிரதேசமாகும். (எ)

# சிறுபான்மை இனக் கட்சிகளுக்கு ஒன்றிணைந்த முன்னணி அவசியம்

## மக்கள் மறுமலர்ச்சி முன்னணி வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 14

சிறுபான்மை பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகள் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிணைந்த முன்னணி ஒன்றை அமைக்க வேண்டும் என்று மக்கள் மறுமலர்ச்சி முன்னணி வலியுறுத்தியுள்ளது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் சிறுபான்மைக் கட்சிகளின் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் மக்கள் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டவர்கள் மேற்குறித்த கோரிக்கையை முன்வைத்தனர் என்று மக்கள் மறுமலர்ச்சி முன்னணி தெரிவித்தது. அதன் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க தேர்தலாக அமையவுள்ளது. இத்தற்கு முன்னர் நடந்த தேர்தல்களில் சிறுபான்மை சமூகங்களின் வாக்குகள் ஆட்சியாளர்களைத் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழ்ந்தன. ஆனால் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்களின் ஆதரவு இல்லாமலேயே ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என்ற நம்பிக்கை பெரும்பான்மை இனத்தவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைக் கட்சிகள் பெரும்பான்மை மக்களின் வாக்குகளை எவ்வாறு கவருவது எனும் அடிப்படையில் வெற்றிக்கான வியூகங்களை அமைத்துவருகின்றன. அவ்வாறிருக்கையில், சிறுபான்மை மக்களின் நிலை என்ன? அவர்களின் தேர்தல் வியூகங்கள் எவ்வாறு அமையப் போகின்றன என்பது பெரும் வினா.

எனவே சிறுபான்மைக் கட்சியினர், தங்களுக்கு எந்தத் தேர்தல் தொகுதிகளில் செல்வாக்கு இருக்கின்றதோ அங்கு தங்களுடைய சொந்தச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டு உறுப்பினர்களைப் பெற வேண்டும். பின்னர் சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றிணைந்த முன்னனியூடாக மொத்தமாகக் கிடைக்கப்பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து பெரும்பான்மைக் கட்சிகளுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் பேச வேண்டும்.

இறுதியில் இந்த சிறுபான்மை முன்னணியிலுள்ள கட்சிகளின் ஆதரவு இல்லாமல் எந்தவொரு பெரும்பான்மைக் கட்சியாலும் நாடாளுமன்றத்தை அமைக்க முடியாத நிலை ஏற்படும் - என்றுள்ளது. (து)

# ராஜிதவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, டிசெ.14

சைட்டம் தனியார் வைத்தியாலை நிர்வாகத்துக்காக வருடத்துக்கு சுமார் 300 கோடி ரூபா செலுத்தி அரச நிதியை முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மோசடி செய்துள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பாக விரைவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் பரப்புரைச் செயலாளர் மொஹமட் முஸம்மில் நேற்று குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிதி மோசடிக் குற்றச்சாட்டுத் தொடர்பில் நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்யச் சென்றபோது முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதனால் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார். (எ)

# பல்கலைக்கழக அனுமதி நடைமுறையில் மாற்றம்

கொழும்பு, டிசெ.14

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு தற்போது நடைமுறையில் உள்ள இசட் வெட்டுப்புள்ளி தொடர்பில் உரிய முடிவை எடுப்பதற்கு வசதியாக நிபுணர் குழுவின் பரிந்துரையைப் பெறுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்புதகவல்திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் நடைபெற்றது. அதிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விரைவில் நிபுணர் குழு அமைக்கப்படும். அந்தக் குழுவின் பரிந்துரைக்கமைய புதிய நடைமுறை தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டார்.

அதேவேளை க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடையும் அனைவரையும் ப்ல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு ஏதுவாக இசட் வெட்டுப் புள்ளி முறைமை நீக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபயவின் தேர்தல் அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் சமமான நீதியான கல்விக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது அரசின் முக்கிய பொறுப்பான போதிலும் தற்பொழுது மாகாண, மாவட்டத்தைப் போன்று பாடசாலைகளுக்கு இடையிலும் கல்வி வசதி மற்றும் கல்வியின் தரத் தன்மையில் வெவ்வேறான முரண்பாடுகள் நிலவுகின்றன என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் கீழ் தற்பொழுது அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக மாவட்டத்தை அடிப்படையாகப் பயன்படுத்தப்படும் இசட் வெட்டுப்புள்ளி நடைமுறைக்குப் பதிலாக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூகவியல் நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்காகப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான சம்பந்தப்பட்ட விடயத்துறை தொடர்பிலான நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)



## கோத்தாபயவை சந்தித்து ஆப்கன் தூதுவர் வாழ்த்து

கொழும்பு, டிசெ.14

இலங்கைக்கான ஆப்கன் தூதுவர் எம். அஷ்ரப் ஹைதருக்கும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆப்கன் அரசின் சார்பில் இலங்கைக்கான ஆப்கன் தூதுவர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேம்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## சட்டவிரோத சிகரெட்டுடன் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.14

சட்டவிரோதமாக நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட் ஒரு தொகைச் சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து சுங்கவரி செலுத்தாமல் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சுமார் 3 ஆயிரத்து 600 சிகரெட்டுகள் கைப்பற்றப் பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர் களனி பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார். (எ)

# எம்.சி.சி. உடன்படிக்கை மீளாய்வு செய்யப்படும்

### *சட்டமா அதிபர் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.14



அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை தொடர்பாக மீள் பரிசீலனை செய்யப்படுமென சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

அதுவரை அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் மானியம் தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்கப்படவிருந்த அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் மானியம் நிராகரிக்கப்படவில்லை அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கடந்த அரசின் அமைச்சரவை, 480 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் கொடைக்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டால், அரச மற்றும் தனியார்துறையில் அடையாளம் காணப்பட்ட தேவைகளுக்கு நிதியளிப்பதன் மூலம் இலங்கையர்களுக்குப் பெரும் பயன் கிடைக்கும் என்று முன்னைய ஐ.தே.க. அரசு தெரிவித்திருந்ததுது. (எ)

## வாழ்க்கைச் செலவை தீர்மானிப்பதற்கு குழு

கொழும்பு, டிசெ.14

வாழ்க்கைச் செலவு தொடர்பான விடயங்கள் தொடர்பாக அமைச்சரவைக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவைத் துணைக் குழுவொன்றை நியமிப்பதற்கு அரசு தீர்மானித்திருக்கிறது.

ஜனாதிபதியைத் தலைவராகக் கொண்ட அந்தத் துணைக்குழுவில் பிரதமரும் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவும் அங்கம் வகிப்பார்.

மகாவலி விவசாயம் நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர், உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் சேமநல அமைச்சர், கடற்தொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர், பெருந்தோட்டத் தொழிற்றுறை மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர் ஆகியோரும் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவைத் துணைக்குழுவில் உள்ளடங்குவார்கள்.

இத்தகையதொரு துணைக்குழுவை நியமிப்பதற்கான பரிந்துரை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# பொதுத் தேர்தலில் பொதுச் சின்னமே

### சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு இது



சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுஜன முன்னணி இணைந்து பொதுச் சின்னத்தில் பொதுத் தேர்தலைக் கையாள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஜனாதிபதி அதற்கு இணக்கம் தெரிவித்தே ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணி அமைத்தார்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை அவர் மீறமாட்டார் என்ற நம்பிக்கை உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் எவ்வாறான வகையில் போட்டியிடப்போகின்றது என்பது தொடர்பாக இன்னமும் பேச்சு மட்டத்தில் உள்ளது.

தொடர்ச்சியாக நாம் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம். கட்சியைப் பலப்படுத்த வேண்டியுள்ளது. அமைப்பாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவேண்டியுள்ளது. விரைவில் இது தொடர்பாக நாம் நடவடிக்கை எடுப்போம். எவ்வாறு இருப்பினும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிறில்ங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து பொது உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டது.

அதில் ஜனாதிபதி தேர்தலில் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் சின்னத்தில் போட்டியிடுவதுடன் பொதுத் தேர்தலில் பொதுச் சின்னத்தில் போட்டியிடுவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கான உடன்படிக்கைகளில் இரு தரப்பும் கைச்சாத்திட்டன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவே அதில் கைச்சாத்திட்டுள்ளார். ஜனாதிபதி உடன்படிக்கைக்கு அமைய செயற்படுவார் என நம்புகின்றோம்.

இது வெளியில் பேச வேண்டிய காரணிகள் அல்ல. கட்சியின் உயர் மட்டமாக முன்னெடுக்க் வேண்டிய தீர்மானமாகும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் கூட்டணியின் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத்தில் நாம் அடுத்த கட்டப் பேச்சுத் தொடர்பாகத் தீர்மானம் எடுப்போம். - என்றார். (எ)

# யாழ்ப்பாணம் விமான நிலைய தரமுயர்த்தலுக்கு 30 கோடி ரூபா

## இந்தியா உறுதியளித்தது என்கிறார் அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, டிசெ.14

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை தரமுயர்த்துவதற்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக இந்திய அரசு உறுதி அளித்துள்ளது என்று கைத்தொழில் ஏற்றுமதி, முதலீட்டு ஊக்குவிப்பு, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



அண்மையில் இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவுடன் நடத்திய சந்திப்பின் போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளதாவது:

பயணிகள் முனையத்துக்கான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும், பொதிகளை நகர்த்தும் பட்டியை அமைப்பதற்கும் இந்தியா 30 கோடி ரூபா கொடையை வழங்கும் என்று உறுதியளித்துள்ளது.

பிராந்திய விமானப் போக்குவரத்துக்காக யாழ்ப்பாணம் விமான நிலையத்தை முன்னைய அரசு அவசரமாகத் திறந்த போதும், அது சரியான முறையில் செயற்படுத்தப்படவில்லை.

அங்கு விமானங்களுக்கு வழிகாட்டும், கட்டுப்படுத்தும், தரையிறங்கும் கருவிகள் கூட இல்லை. பிராந்திய விமானங்களை இயக்குவதற்கான வசதிகளை நாங்கள் மேம்படுத்த வேண்டும்.

இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து விடுத்த வேண்டுகோளின் பேரில், நாட்டை விட்டு வெளியேறும் பயணிகளுக்கு விதிக்கப்படும் வரிகளைக் குறைப்பதற்கான சாத்தியங்களை அரசு ஆராய்ந்து வருகிறது. - என்றார். (ஏ)

## ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது

கொழும்பு, டிசெ.14

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இரத்மலான, கொலன்னாவ, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் வைத்துச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து 4360 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் அவர்கள் விரைவில் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ)

## ஆளுநர்களின் பொறுப்புக்கள் தொடர்பான வேலைத் திட்டம்

கொழும்பு, டிசெ.14

தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் மாகாண ஆளுநர்களின் பொறுப்புக்கள் தொடர்பான வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என்றும், அந்த வேலைத் திட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இதுவரையில் வடக்கு மாகாணத்திற்கான ஆளுநர் நியமிக்கப்படவில்லை. வடக்கு ஆளுநர் நியமனத்துக்காக பலரது பெயர்களும் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. எதிர்வரும் சில தினங்களில் வடக்குக்கான புதிய ஆளுநர் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஏ)

## மேலதிக கொடுப்பனவை அனுமதித்தது திறைசேரி

கொழும்பு, டிசெ.14

அரசுக்குச் சொந்தமான சட்ட ரீதியான அமைப்புக்கள் மற்றும் முழு அரசுக்கும் சொந்தமான நிறுவனங்களில் தொழில்புரியும் ஊழியர்களுக்கான 2019ஆம் ஆண்டுக்கான மேலதிகக் கொடுப்பனவை வழங்குவதற்கு திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர்களுக்கான அனைத்து செயலாளர்கள், முழு அரசுக்கும் சொந்தமான நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அனைத்து அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் தலைவர்கள் தொடர்பாக திறைசேரி ஒரு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது என்று நிதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. 2018 ஆம் ஆண்டின் நிதி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இந்த மேலதிக கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என்று நிதியமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது. (ஏ)

## மின் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

ஹபரண கிரிவடுன்ன பகுதியில் மின்சாரம் தாக்கியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கலேவல, பட்டிவெல பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மின்சார சபையின் புதிய மின் சக்தி அமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொண்டிருந்த போதே மின்சாரம் தாக்கியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் ஹபரண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஏ)

## பொதுத்தேர்தலில் சாதிக்க திட்டமிடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.14

பொதுத் தேர்தலை மையப்படுத்தி 50 நாள் வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் பொதுத் தேர்தலை மையமாகக் கொண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி 50 நாள் வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளத் தயாராகவுள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தலில் வீழ்ச்சியடைந்த வாக்குகளை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அமைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி என்ற அமைப்பின் ஊடாகவே பொதுத் தேர்தலிலும் களமிறங்கவுள்ளது.- என்றார். (ஏ)

## பொதுஜன முன்னணியின் பட்ஜெட் தோற்கடிப்பு

ஆளும் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் வசமிருக்கும் அநுராதபுரம் - கெக்கிராவ, பலாகல பிரதேச சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபைத் தலைவர் ஆர்.ஏ விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்தினம் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வாக்கெடுப்பின்போது ஆதரவாக சிறிலங்கா பொதுஜன முன்னணின் 5 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் 6 உறுப்பினர்களும், ஜே.வி.பி மற்றும் சிறிலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் இருவர் என 8 பேர் வாக்களித்து வரவு- செலவுத் திட்டத்தை தோற்கடித்துள்ளனர். (ஏ)

## துறைமுக அதிகார சபையின் தலைவர் தயா ரத்நாயக்க

கொழும்பு, டிசெ.14

முன்னாள் இராணுவத் த்ளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க, துறைமுக அதிகார சபையின் புதிய தலைவராக நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அரச நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள், பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். துறைமுக அதிகார சபைத் தலைவராக, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க, நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கையின் 20 ஆவது இராணுவத் தளபதியாகப் பணியாற்றியவர். 2015ஆம் ஆண்டு இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றார்.

புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர், முன்னாள் இராணுவ அதிகாரிகள் பலர், அரச உயர்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே, முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் தயா ரத்நாயக்க, துறைமுக அதிகார சபைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஏ)

## வரிச் சலுகை மக்களிடம் சென்றதா என ஆராய பணிப்பு

கொழும்பு, டிசெ.14

அரசால் வழங்கப்பட்டுள்ள வரிச் சலுகை பொது மக்களுக்கு உண்மையிலேயே சென்றடைந்துள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

அதிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து சிறப்பு வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டன. (ஏ)

# 17 வயதுச் சிறுவனை கொன்றோருக்கு தூக்கு

கொழும்பு, டிசெ.14
17 வயதுடையச் சிறுவனைக் கத்தியால் குத்தி கொலை செய்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.



கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த குருசாமி மில்டன் மற்றும் களுதான்திரிகே ருவன் எனும் ஆஜா ஆகிய இருவருக்கே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ள குருசாமி மில்டன் எனும் சந்தேகநபர் நீதிமன்றத்துக்கு வராத காரணத்தால் அவரைக் கைது செய்யுமாறு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி கொட்டாஞ்சேனை பகுதியில் இடம்பெற்ற தனிப்பட்ட பிரச்சினை காரணமாக 17 வயதுடைய பிரசாத் விஸ்வன்ன எனும் சிறுவன் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபரால் குறித்த இருவருக்கு எதிராகவும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றம் எவ்வித சந்தேகமும் இன்றி நிரூபிக்கப்பட்டதையடுத்து அவர்களுக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (எ)

# மும்மொழி பாடசாலைகள் விரைவில் நாடு முழுவதும்

கொழும்பு, டிசெ.14
**பா**டசாலை கட்டமைப்புக்குள் ஆயிரம் தேசிய பாடசாலைகளாக அபிவிருத்தி செய்வதற்கும் ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கிய வகையிலும் புதிய மும்மொழிப் பாடசாலையை அமைப்பதுடன், இலவச, சமமான, நீதியான மற்றும் தரமான கல்வியை அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது

இது தொடர்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவை கொள்கை ரீதியாக ஒப்புதல் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலும் சகல வசதிகளைக் கொண்ட மூன்று பாடசாலைகளை அபிவிருத்தி செய்து அந்த பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மேம்படுத்துவதன் மூலம் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரம் வரையில் அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள் ளது.

இதே போன்று அனைத்து மாவட்டங்களுக்கும் மும்மொழி கற்பிக்கப்படுவதை உறுதிசெய்யும் அனைத்து வசதிகளையும் கொண்ட தேசிய பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கும் எதிர்வரும் இரண்டு வருட காலப்பகுதிக்குள் இவ்வாறான இருபது பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கும் கல்வி அமைச்சால் திட்டமிடப் பட்டுள்ளது. (எ)

# நிறுவனத் தலைவர்களுக்கான பெயர் பட்டியல் கோத்தாவிடம்

கொழும்பு, டிசெ.14
40 அரச நிறுவனங்களுக்கான தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களை நியமிப்பதற்கான பரிந்துரை ஜனாதிபதி செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரச நிதி நிறுவனங்கள், அரசமைப்பு நிறுவனம், அரச தொழில் முயற்சியாளர்கள் சபை ஆகியவற்றிற்கு தகுதியானவர்களைப் பரிந்துரைப்பதற்காக நியமிக்கப்பட்ட 6 பேர் அடங்கிய குழுவால் இந்தப் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு பதவிக்கு தகுதியான மூவர்களின் பெயர் அடங்கலாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று அந்த குழுவின் உறுப்பினர் நாலக்க கொடஹேவா குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வாரத்துக்குள் அரச நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபையை நியமிக்க முடியும் என அவர் கூறியுள்ளார்.

ஒரே துறைசார் நிறுவனங்களை ஒன்றிணைக்கும் தீர்மானமும் ஜனாதிபதி செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று அரச நிறுவனங்களுக்கு தகுதியானவர்களை பரிந்துரைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# சட்டவிரோத மதுபானம் விற்போருக்கு ஆபத்து

கொழும்பு, டிசெ.14
பௌர்ணமி தினத்தில் மதுபானம் விற்பனை செய்த 4 மதுபான விற்பனை நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என்று கலால் வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. விடுமுறை தின மற்றும் கலால் வரிச் சட்டங்களை மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு மற்றும் கிரிபத்கொட ஆகிய பகுதிகளில் உள்ள 4 மதுபான விற்பனை நிலையங்களுக்கே சீல் வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பண்டிகைக் காலத்தில் சிறப்புச் சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்காக இரு சிறப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று கலால்வரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அனுமதிப்பத்திரமின்றி மதுபானசாலைகளை நடத்துதல், மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடுவோரை கைது செய்வதற்கு ஒரு பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மதிவரிசட்டங்களுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் தொடர்பான சுற்றிவளைப்பிற்கு மற்றுமொரு பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி வரை இந்த இரு பிரிவுகளும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)



# இலங்கை வந்தார் ஜப்பான் அமைச்சர்

கொழும்பு, டிசெ.14
ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் மொடேகி டொசிமிட்சு நேற்றுமுன்தினம் இரவு உத்தியோகபூர்வமாகப் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்தடைந்தார். அவருடன் 21 பேர் கொண்ட தூதுக் குழுவும் இலங்கை வந்துள்ளது.

அவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# எம்.சி.சி. ஒப்பந்தம் பற்றி இதுவரை தீர்மானமில்லை

ஒவ்வொரு தரப்பிலும் வெவ்வேறு கருத்துக்கள் கூறப்பட்டாலும் அமெரிக்காவுடனான மிலேனியம் சவால் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அரசு இதுவரையில் எந்தவிதமான தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

கடந்த அரசு இந்த உடன்படிக்கையை எந்தவிதமான கலந்துரையாடல்களும் இன்றி கொண்டு வர முயற்சித்ததால்தான் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டது.

இதுபோன்ற உடன்படிக்கைகள் மேற்கொள்ளும் போது பொதுமக்களின் கைகளுக்கு உடன்படிக்கையின் சகல உள்ளடக்கமும் செல்ல வேண்டும். எந்தவொன்றையும் மறைத்துச் செய்வதற்கு முயற்சிக்கக் கூடாது. -என்றார். (எ)

# சொய்சாவின் இடத்துக்கு லியனகே

உயிரிழந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சாவின் வெற்றிடத்திற்கு வருண பிரியந்த லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் பட்டியலில் ரஞ்சித் டீ சொய்சாவுக்கு அடுத்ததாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள வருண பிரியந்த லியனகேயை அந்த வெற்றிடத்தில் பெயரிடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டீ சொய்சா உடல்நலக்குறைவால் சிங்கப்பூர் வைத்தியசாலை ஒன்றில் கடந்த 4 ஆம் திகதி உயிரிழந்திருந்தார். (எ)

# "கோப்" குழுவை பலமாக்குங்கள்

*அதன் தலைவர் வலியுறுத்து*

கொழும்பு, டிசெ.14



நாடாளுமன்றக் கோப் குழுவைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அதன் தலைவரும், மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹெந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோப் குழுவில் அரச நிறுவனங்கள் தொடர்பான விசாரணைகளின்போது வெளிப்படும் முறைகேடுகள் பற்றிய தகவல்கள் குறித்து உடனடியாக வழக்குத் தொடர்வதற்கு கோப் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அமைச்சுக்கள் அனைத்தும் அரச கட்டடங்களில் மாத்திரமே இயங்க வேண்டும். அமைச்சுக்கள் மாத்திரமல்லாது அரச நிறுவனங்கள் அனைத்தும் அரச கட்டடங்களில் முன்னெடுக்கப்பட்ட சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். அரச நிறுவனங்கள் பல தனியார் கட்டடங்களை கூடிய விலைக்கு குத்தகைக்கு எடுத்து அரச நிதியை வீணாகச் செலவழித்து வருகின்றது. - என்றார். (எ)



பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான

# வன்முறையை நிறுத்துவோம்

## வீதி நாடகத்துடன் ஊர்வலம்

மட்டக்களப்பு,டிசெ.14

பெண்கள் மற்றும் சிறுவர் வன்முற்றையை நிறுத்துவோம் எனும் தொனிப் பொருளிலான விழிப்புணர்வு ஊர்வலமும், வீதி நாடகமும் வாழைச்சேனையில் நேற்று இடம்பெற்றன.

விநாயகபுரம் கிராம அதிகாரி அலுவலகத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம், கண்ணகிபுரம் முல்லை வீதி, வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதி வழியாக வாழைச்சேனைப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் முன்பாக கதிரவன் கலைக் கழகத்தின் தலைவர் க.இன்பராசா தலைமையில் பெண்கள் மற்றும் சிறுவர் வன்முறையை நிறுத்துதல் தொடர்பிலான வீதி நாடகம் இடம்பெற்றது. (க)

திருமணப்பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
இந்தியன் செலக்ஷனின்
நத்தார், புதுவருட
ஆடைத் திருவிழா

02 சாறிகள்
வாங்கினால் அதே சாறி
01 இலவசம்


கொட்டன் சல்வார்
பழைய விலை - 3500
புதிய விலை - 1000

- ✓ பட்டுச் சாறிகள்
- ✓ கொட்டன் சாறிகள்
- ✓ சல்வார்
- ✓ சல்வார் துணிகள்
- ✓ Top வகைகள்
- ✓ சேட், T சேட் ரவுசர்

இன்னும் ஏராளமான
ஆடைத் தெரிவுகள்

காலம் : 14.12.2019 முதல் 31.12.2019
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்



BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's

BTEC HND
Quantity Surveying & Construction Economics
Leading to BSc(Hons)

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Quantity Surveying கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Quantity Surveying நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்.

Pearson
University of East London
University of Wolverhampton
CIOB
RICS

MADHU 0777 102131
SANCHU 0777 692318
INTAKE NOW ON
BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.
20 YEARS
ISO 9001:2008 CERTIFIED

021 221 9910
info@bcas.lk
www.bcas.lk
BCAS Ranked "Platinum Partner" No.1 once again

**யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**
**சிறகடிக்கும் சிட்டுக்கள்**


காலம் : 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
இடம் : கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

2019 ஆம் ஆண்டு தரம் 05 மாணவர்களையும் அனைத்து ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு.

அனைவரும் தவறாது சமுகம் தரவும்

**தரம் - 5 மாணவர்களின் பெற்றோர்கள்**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24 . 02 . 1946

இறப்பு 27 . 12 . 2015

## தாமோதரம்பிள்ளை லோகநாதன்
## (ரமணா)

எம்மைவிட்டுப் பிரிந்து நான்காண்டுகள் ஆகிவிட்டதே!
அன்பிற்கும், பாசத்திற்கும் வரைவிலக்கணமாய்
அறிவின் சிகரமாய் உயர்ந்து நின்ற
எம் அன்புத்தெய்வமே இன்றும்
எம்மனம் தவிக்கிறது உங்கள் நினைவுகளில்
எங்களுக்காகவே வாழ்ந்து எம்மை வாழவைத்த
எம் அன்பு தெய்வமே
எம் உயிர் உள்ளவரை எம் உள்ளத்தில் வாழ்வீர்கள்
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் மறக்குமா உங்கள் அன்பு முகம்

58/1.கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## திருமதி கணபதிப்பிள்ளை கனகேஸ்வரி



தோற்றம் 03.08.1944 மறைவு 10.12.2019

மானிப்பாய் நவாலியை பிறப்பிடமாகவும். அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி கணபதிப்பிள்ளை கடந்த **(10.12.2019)** செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம். பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரியின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பத்தமேனியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை **(15.12.2019)** ஞாயிற்றுக் கிழமை மதியம் **12.30** மணியளவில் பத்தமேனி தீத்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காளிகோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி.**
**077 153 7974, 075 533 1903**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# புத்தாண்டு ராசிபலன்




**சீறி பாயும் சிம்ம ராசிக்கு அடிக்கும் ராஜயோகம்**




சிம்ம ராசிக்கு 2020ஆம்ஆண்டு ராஜயோகத் தோடு இலாபம் தரும் ஆண்டாக அமைந்துள்ளது.

ஐந்தாம் வீட்டில் குரு, ஆறாம் வீட்டில் சனி. ராஜா சிம்மத்துக்கு அதிபதி சூரியன், சனி எப்போதுமே எதிர்ப்பாகத்தான் இருப்பர். ஆறுக்கு அதிபனாக சனி அமர்வதால் நன்மையைத் தருவார். விபரீத ராஜயோகம். குரு சனி இணைவு அற்புதமாக இருக்கும். குரு அதிசாரமாகப் போகும் காலங்களில் சுமாராகவே இருக்கும்.

### சிம்மராசிக்கு மிகச்சிறந்த ஆண்டு

உங்கள் ராசிக்கு பஞ்சம ஸ்தானம் எனப்படும் பூர்வ புண்ணிய ஸ்தானம் ரொம்ப வலிமையாக இருக்கிறது. பூர்வ புண்ணியம் அற்புதமாக இருக்கிறது. சனி, கேது, புதன் ஆகிய கிரகங்கள் இணைந்து உங்களுக்கு அற்புதமான பலன்களைத் தரப்போகிறார்கள்.

சனி ஆறாம் வீட்டில் ஆட்சி பெற்று விபரீத ராஜயோகத்தை தரப்போகிறார். கடந்த பல காலங்களாகப் பட்ட கஷ்டம் தீரப்போகிறது. அதிக சம்பளத்துடன் புதிய வேலை கிடைக்கும். இதுநாள் வரை தடைப் பட்டு வந்த பதவியுயர்வுகை கூடி வரப்போகிறது. பதவியோடு புகழும் தேடி வரும். அரசியல்வாதிகளுக்கு உயர்பதவிகள் தேடி வரும்.

### மனைவி உடல் நலனில் அக்கறை

இதுநாள் வரை திருமணம் நடைபெறுவதில் இருந்த தடைகள் நீங்கும். திருமணம் நடைபெறும் காலம், திருமணம் நடைபெற்று குழந்தைப் பாக்கியத்துக்காக காத்திருப்பவர்களுக்கு புத்திரபாக்கியம் கிடைக்கும். மனைவி உடல் நலனில் அக்கறை காட்டுங்கள். நோய்கள் வந்தாலும் உடனடியாக தீரும்.

### முதலீட்டில் இலாபம்


மாணவர்களுக்கு இது அற்புதமான ஆண்டு. உயர்கல்வி படிக்கும் யோகம் வரும். உயர்கல்வி படித்துக்கொண்டிருப்பவர்களுக்கு அற்புதமான ஆண்டு நன்றாகப் படித்து வேலை கிடைக்கும். உங்கள் இலாப ஸ்தானத்தில் உள்ள ராகுவை குரு பார்ப்பதால் தொழிலில் நல்ல இலாபங்கள் வரலாம். வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும் பங்குச் சந்தை முதலீடுகள் அற்புதமான லாபத்தைக் கொடுக்கும்.

### மகிழ்ச்சி தரும் ஆண்டு

இடமாற்றம் வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு நன்றாக இருக்கும். ஊர்மாற்றம் ஏற்படும் காரணம் சிம்ம ராசியின் மீது குருவின் பார்வை விழுகிறது. குருவின் பார்வை உங்கள் ராசிக்குக் கிடைப்பதால் பொருளாதார நிலை உயரும். குடும்பத்திலும் மகிழ்ச்சி அதிகரிக்கும். வாழ்க்கை நிலை உயரப்போகிறது.

# மரண அறிவித்தல்

## கந்தையா தர்மரத்தினம்



தோற்றம் 13.04.1949 மறைவு 13.12.2019

சூராவத்தை சுன்னாகத்தினைப் பிறப்பிடமாகவும், இல.15, சேவிஸ் வீதி, கன்காம்பிகைக் குளம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மரத்தினம் நேற்று (13.12.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- பூரணம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை- அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும், சோபனா (சுபா), ஜெயந்தினி (ரதி), ஜெகன், நிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சபாரத்தினம், பத்மப்பிரியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிகழ்நிலவன், லோஜிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இராஜரட்ணம், யோகரட்ணம் மற்றும் அபூர்வமலர், நித்தியானந்தவதி, ஆனந்தமலர் காலஞ்சென்ற தனரட்ணம் ஆகியோரின் சகோதரரும், தவமணி காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் குமாரன், இராஜேஸ்வரி, ஆனந்தகுமார் காலஞ்சென்ற சித்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இரணைமடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொலைபேசி:- 077 222 4429**

**தகவல்: குடும்பத்தினர்**

## அடுத்த...

துள்ளார்.

கைலாசா என்ற பெயரில் தனி நாடு அமைக்கப்போவதாக நித்யானந்தா ஆரம்பித்த விவகாரம் தற்போது உச்சத்தை தொட்டுள்ளது. தனிநாடு எங்கே அமைக்கப்போகிறீர்கள் என்று கேள்வி எழுந்த நிலையில், சிவத்தை உணர்ந்தால், உங்களுக்குள் கைலாசா உருவாகும் என்று பேசி, தனிநாடு கதைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

ஆனால், தனது அடுத்த இலங்கையிலுள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் என்று நித்யானந்தா வெளிப்படையாக அறிவித்துள்ளார். தனது சத்சங்கத்தின் போது, ராவணனை திட்டித்தீர்த்த நித்யானந்தா, ராவணன் ஒரு முட்டாள் என்று குறிப்பிட்டார். மேலும் ராவணன் நேரடியாக கைலாசத்தை தொட்டுத் தூக்க முயன்றான். கைலாசத்தில் உள்ள சிந்தாமணி மண்டபம் தான் கைலாசத்தின் அருள்பொலிவுக்கு காரணம் என நினைத்தான். உடனே எனக்கு அந்த மண்டபம் வேண்டும் என சிவனிடம் கேட்டான். சிவனும் எடுத்துக் கொள் என்று கூறிவிட்டார். இந்த முட்டாள் ராவணனும் அந்த சிந்தாமணி மண்டபத்தை எடுத்துச் சென்று இலங்கையில் வைத்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஓ.5-7)

## புத்துயிர்...

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த அவர், படையினர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார் என்று பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் கூறப்பட்டுள்ளது.

முஸ்லிம் தீவிரவாத சக்திகள் நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. அவை நாட்டின் பொருளாதாரத்தை அழித்துள்ளன. அதேவேளை, சந்தேகத்தையும் அச்சத்தையும் உருவாக்கியுள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து முழுமையான விசாரணைகள் அவசியமாகும்.

இந்தப் பயங்கரவாத தாக்குதல்களுக்கு யார் காரணம் என்பதை கண்டறியவேண்டும். இது பௌத்த நாடு, மக்களிற்கு தமது சொந்த மதங்களை பின்பற்றுவதற்கான உரிமையுள்ளது. அனைத்து மதத்தினரும் அமைதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவது படையினரின் கடமையாகும் - என்றார். (ஓ.5)

## உழவு...

நாவற்குழி தெற்கு கடற்கரையோரப் பகுதியில் மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரத்தில் ஏறிச் சென்ற போது தவறி விழுந்து சில்லுக்குள் அகப்பட்டு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஓ.5,159)

## நிம்மதியாக...

எந்தத் தொடர்புகளும் இல்லை. எங்களை நிம்மதியாக வேலைசெய்ய விடமாட்டார் கள் போல் தெரிகிறது. பொறுத்துப் பார்ப்போம், என்றார் அவர். (ஓ.5)

## இஸ்லாமிய...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுதாரி தாக்குதலில் கலந்துகொண்ட அனைவரும் இலங்கையர்கள். இந்த அச்சுறுத்தல் எமது நாட்டுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை. பிராந்தியத்தில் ஏனைய நாடுகளுக்கும் இந்த அச்சுறுத்தல் உள்ளது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த ஆண்டு இரண்டு சந்தர்ப்பங்களில் இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாதிகள் படகு மூலம் இந்தியாவுக்குள் பிரவேசிக்க முயற்சித்தமை தொடர்பான தகவல்களின் காரணமாக இந்தியா முழுவதும் பாதுகாப்பு படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். எமக்கும் இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போனால் இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ் மாத்திரமன்றி மியன்மார், தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்கு அப்பால் உள்ள நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும்.

2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உலகில் வலுவானதும் முக்கிய பயங்கரவாத அமைப்பாகவும் உத்தியோகபூர்வ ரீதியில் பெயரிப்பட்டது. அமெரிக்காவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் நேரடியாக அச்சுறுத்தல் இல்லாத போதிலும் அவர்கள் இதனை உலகின் மிக மோசமான பயங்கரவாத அமைப்பாக கருதினர்.

2009 ஆம் ஆண்டில் நாம் இந்தப் பயங்கரவாத அமைப்பை திட்டவட்டமாக தோற்கடித்தோம். இதேபோன்று இஸ்லாமிய தீவிரவாதத்தையும் நாம் வெற்றி கொள்ளுவோம்.

2005 ஆம் ஆண்டு நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் பொருத்தமான நபரை பாதுகாப்புச் செயலாளராக நியமித்தேன். அவரின் பரிந்துரையின் அடிப்படையில் ஏனைய பொருத்தமான அதிகாரிகளை பொருத்தமான பதவிகளுக்கு நியமித்து போரை வெற்றி கொள்ளும் ஆயுதப் படை இராணுவப் பொறிமுறையை கட்டியெழுப்பினேன்.

இன்று அதே முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ச உங்களது ஜனாதிபதி மற்றும் படைத்தளபதி என்ற ரீதியில் பொது மக்களால் அமோக வெற்றி ஆணையால் நியமிக்கப்பட்டுள்ளார். நாம் மீண்டும் ஒரு முறை இந்த நாட்டின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றமை எமது நாட்டின் இறைமை மற்றும் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் சந்தர்ப்பத்திலே.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக கிடைத்த வெற்றியின் 10 வருட நிறைவை கொண்டாட இருந்த சில தினங்களில் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பால் உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கை போன்று தெற்கில் ஆயுத கிளர்ச்சியால் நாம் உலகின் மிக மோசமான மோதல்களைக் கொண்ட பூமியாக அடையாளப்படுத்தப்பட்டோம். இதன் பின்னர் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் இருந்த உலகின் மிக மோசமான பயங்கரவாத அமைப்பு நாட்டில் இருந்தது.

ஆசியாவில் மக்களை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்பட்ட பெரும் மற்றும் கொடூரமான பயங்கரவாத தாக்குதல் இந்த வருடத்தில் உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற சம்பவமாகும். நாடு சிறியதாயினும் நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால் சிறியதல்ல. கடந்த 5 வருட காலப்பகுதியில் நாட்டின் புலனாய்வு பிரிவு சீர்குலைந்துள்ளது. நிர்வாகத்தில் இருந்த அரசு புலனாய்வு பிரிவு அதிகாரிகளை படை காய்களாக மாற்றினர். தொல்லைகளை ஏற்படுத்தி போலியான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலைமையை புலனாய்வு பிரிவு மாத்திரம் எதிர்கொள்ளவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராகப் போர் செய்த ஆயுத படை உயர் தரத்தில் இவ்வாறான இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இதில் சிலர் நீதிமன்றத்தில் முற்படுத்தி சில வாரம் தொடக்கம் ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலம் வரையில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டனர். இந்த நடவடிக்கையின் நோக்கம் எமது படை வீரர்கள் அல்ல. திருடர்கள் மற்றும் கொலையாளிகள் என்ற கருத்தில் இலங்கையர்களைப் போன்று வெளிநாட்டவர்கள் மனதிலும் இவர்கள் தொடர்பில் அவமான பெயரை ஏற்படுத்தினர்.

உலகில் எந்தவொரு நாட்டு அரசும் இவ்வாறு தமது தமது படைகளை குறைத்து மதித்ததில்லை. ஆயுத படை என்பது தேசிய பாதுகாப்பாகும். 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அரசு மாறிய பின்னர் நாட்டில் ஏற்பட்ட வெளிநாட்டு எதிரிகளின் சக்தியால் இலங்கை ஆக்கிரமிக்கப்படும் நிலை ஏற்பட்டது. ஆயுத படையை வேட்டையாடி அவர்களது உயிரிற்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தினர். மகா சங்கத்தினரை அடிமைப்படுத்தி இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகத்தை மிதித்து 4 தசாப்த காலம் நிலவிய சிவில் போரின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாதவற்றை பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்ததை நாம் கடந்த 5 வருட காலப்பகுதியில் காணக்கூடியதாக இருந்தது.

கடந்த அரசு ஜெனிவா நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் முன்னால் சென்று வெளிநாட்டு நீதிபதிகளையும் முக்கியஸ்தர்களையும் கொண்ட எமது இராணுவ அங்கத்தவர்களுக்கு எதிராக இராணுவ குற்றச்சாட்டு நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கைக்கு எதிராக பிரேரணையை நிறைவேற்றுவதை நாம் கண்டோம். இதனை செய்து இலங்கையிலேயே மக்களினால் அதிகாரத்துக்கு அமர்த்தப்பட்ட அரசாகும். இன்று கடந்த 5 வருட காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களை சரி செய்வதற்காக பெரும் மக்கள் ஆணையுடன் ஜனாதிபதி ஒருவரை இந்த நாட்டு மக்கள் நியமித்துள்ளனர் - என்றார். (ஓ.5)

## வடக்கு...

ரும் 26ஆம் திகதி வருகை தரவுள்ளார்.

ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள பறக்கும்ப வித்தியாலயத்தில் இடம்பெறும் நிகழ்வுக்கான முன்னோடிக் கலந்துரையாடல் நேற்றைய தினம் மாவட்டச் செயலகத்தில் புத்தசாசன அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தலைமையில் இடம்பெற்றது. (ஓ.5,105)

## இன்னும்...

பய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகப் பிரதானிகளை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் கோத்தாபய ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன் பின்னர் ஊடகப் பிரதானிகள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். (ஓ.5,22)

## பளை...

பளை கரந்தாய் குளம் வளைவுப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த சுற்றுலா அரைச் சொகுசுப் பேருந்துடன், மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு மாமுனையைச் சேர்ந்த கு.பிறேம்குமார் (வயது-24) மற்றும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான ரவீந்திரகுமார் (வயது-32) இருவருமே உயிரிழந்துள்ளனர். பிறேம்குமார் திருமணமாகி 7 மாதங்களேயாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்துடன் எதிர்த்திசையில், இயக்கச்சியிலிருந்து பளை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியது. சம்பவ இடத்தில் இருவரும் உயிரிழந்தனர்.

பேருந்தின் சாரதி பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஓ.5,6,70,209)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 820
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.12.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 73,153,910/-
வெற்றி இலக்கங்கள் 04 09 46 74
ஆங்கில எழுத்து V

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1090
சீட்டிழுப்பு திகதி 2019.12.12 வியாழக்கிழமை
H 08 18 59 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,094,088/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 13.12.2019
வெற்றி வாரம் 2706
வர்ணம் கருநீலம்
இடபம்
வெற்றி இலக்கங்கள் 14 34 35 37
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/=
14.12.2019 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்.

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 305
சீட்டிழுப்பு திகதி 13.12.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 09 23 60
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 48,367,232/=
18.12.2019 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk



# இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் செயல் திறன் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். ஆதாய பண வரவு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**இடபம்:** எளிதான பணி கூட சுமை போல தோன்றும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். சுய கௌரவம் கருதி தாராள பணச் செலவு செய்வீர்கள்.

**மிதுனம்:** மனதில் தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் பெறும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும். புத்திரரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** கூடுதல் பணி உருவாகி மனதைச் சஞ்சலப்படுத்தும். தொழில், வியாபாரத்தில் சில மாற்றங்களைச் செய்வது அவசியம். பணச் செலவு அதிகரிக்கலாம். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**சிம்மம்:** கடந்த கால நற்செயலுக்கான பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். உபரி பண வருமானம் கிடைக்கும். விரும்பிய பொருள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி:** இலட்சியதிட்டத்தினை செயல்படுத்துவீர்கள். இஷ்ட தெய்வ அருளால் தொழில், வியாபாரம் செழிக்கும். நிலுவை பணம் வசூலாகும். காணாமல் தேடிய பொருள் கிடைக்கும்.

**துலாம்:** இடையூறு செய்பவரை அறிந்து கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்கக்கூடாது.

**விருச்சிகம்:** ஆரவாரம் தவிர்த்து செயல்பட வேண்டும். தொழில், வியாபாரம் செழிக்க நண்பரின் ஆலோசனை உதவும். பண வரவில் இருந்த தாமத நிலை மாறும்.

**தனுசு:** குடும்ப உறுப்பினர்கள் அதிக அன்பு, பாசம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் பொறுப்பை உணர்ந்து செயல்படுவீர்கள். பணப் பரிவர்த்தனை சீராகும்.

**மகரம்:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். உங்களைச் சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க நல்வழி பிறக்கும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** செயல்களில் இதமான அணுகுமுறை நல்ல பலன்களைத் தரும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பு சீரான வளர்ச்சியைத் தரும்.

**மீனம்:** சுற்றுப்புற சூழல் தொந்தரவு தரலாம். அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழிலில் நிலுவை பணி நிறைவேற்றுவது நல்லது. சராசரி அளவில் பண வரவு கிடைக்கும்.




# வென்றார் போரிஸ்!

லண்டன், டிசெ. 14

பிரிட்டன் பொதுத் தேர்தலில் ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி தனிப் பெரும்பான்மை வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியமைப்பதை உறுதி செய்தது.

பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் பொதுத் தேர்தல் இடம்பெற்றது. காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரையில் 650 தொகுதிகளிலும் வாக்குப் பதிவு இடம்பெற்றது. பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில் 326 தொகுதிகளில் ஒரு கட்சி வெற்றிபெற்றால் அந்தக் கட்சி ஆட்சியமைக்கும்.

இந்த நிலையில் 368 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சியமைத்தது ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி. முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சிக்கு இந்தத் தேர்தல் பெரும் பின்னடைவு என்று கருதப்படுகிறது. தொழிலாளர் கட்சியின் கோட்டையாக இதுவரை காலமும் விளங்கிய வடக்கு வேலஸ், வடக்கு லண்டன் என்பனகூட இம்முறை கொன்சர்வேடிவ் கட்சியின் பக்கமாகச் சென்றுள்ளன.

கொன்சர்வேடிவ் கட்சியின் தொண்டர்கள் நேற்றுக் காலைமுதல் அங்கு கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பிரிட்டன் முழுவதும் உச்சக்கட்டப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (ம)

## உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் பிரிட்டன்

### போரிஸ் பெருமிதம்


லண்டன், டிசெ. 14

பிரிட்டனின் பொதுத்தேர்வுகள் முடிவு தொடர்பான கருத்துக்கணிப்பு தங்களுக்கு சாதகமாக அமைந்ததையடுத்து, உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் பிரிட்டன்தான் என போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.

650 தொகுதிகளைக் கொண்ட பிரிட்டன் நாடாளுமன்றத்திற்கு நேற்று பொதுத்தேர்தல் நடைபெற்றது. உள்ளூர் நேரப்படி காலை 7 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு, இரவு 10 மணி வரை நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் தமக்குச் சாதகமாக அமைந்ததை அடுத்து, உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் பிரிட்டன் என்று பெருமிதம் தெரிவித்துள்ளார் போரிஸ்.

'நாடு முழுவதும் வாக்களித்த, தன்னார்வத் தொண்டு செய்த, வேட்பாளர்களாகப் போட்டியிட்ட அனைவருக்கும் நன்றி. உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தில் நாம் வாழ்கிறோம்' என போரிஸ்ம் ஜோன்சன் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டார். (ம)






## பதவி விலகல் ஹோர்பன்!

லண்டன், டிசெ. 14

பிரிட்டன் பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து, தொழிலாளர் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகினார் ஜெரோமி ஹோர்பன்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறும் முடிவுக்கு அந்த நாட்டின் பெருமளவான மக்கள் ஆதரவாகக் கருத்துத் தெரிவித்திருந்தனர். எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறும் மக்கள் ஆணையை நடைமுறைப்படுத்த கொன்சர்வேடிவ் கட்சியால் முடியவில்லை. இதனால் ஹோர்பனின் கரங்கள் இந்தத் தேர்தலில் பலப்படும், தொங்கு நாடாளுமன்றம் அமைக்கப்படும் என்ற பொதுவான அபிப்பிராயமே நிலவியது. இந்த நிலையில் தொழிலாளர் கட்சிக்கு படுதோல்வி கிடைத்ததை அடுத்து பதவியில் இருந்து விலகினார் ஹோர்பன். (ம)

# சிறுபான்மை மக்களின் உரிமையை இந்தியா பாதுகாப்பது மிக அவசியம்

## அமெரிக்கா வலியுறுத்துகிறது



வொஷிங்டன், டிசெ. 14

இந்தியாதனது அரசமைப்புமற்றும்ஜன நாயக விழுமியங்களுக்கு ஏற்ப தனது நாட்டில் உள்ள மத சிறுபான்மை யின ரின் உரிமைகளைப் பாதுகாக்க வேண் டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள் ளது. பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய அண்டை நாடுகளில்இருந்துமதரீதியானவேறுபா டுகளினால் வெளியேறி, இந்தியாவில் தஞ்சம் புகுந்த முஸ்லிம்கள் அல்லாத பிறசிறுபான்மையினருக்குகுடியுரிமை வழங்கும்வகையில்இந்தியமத்தியஅரசு குடியுரிமை சட்டத்திருத்த பிரேரணை யைக்கொண்டுவந்துள்ளது.

இந்தமசோதாநாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு சட்ட மாகியுள்ளது. இந்தப் பிரேரணைக்கு வடகிழக்கு மாநிலங்களில் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. எதிர்க்கட்சித்தலைவர் களும் இந்தப் பிரேரணையைக்கடுமை யாக எதிர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில், இந்திய அரசு தனது நாட்டில்உள்ளமதசிறுபான்மையினரின் உரிமைகளைபாதுகாக்கவேண்டும்என அமெரிக்கவெளியுறவுத்துறைசெய்தித் தொடர்பாளர்தெரிவித்துள்ளார்.

'குடியுரிமை சட்டத் திருத்த பிரேரணை தொடர்பான விவகாரங்களை நாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். மதசுதந்திரத்திற்கான மரியாதைமற்றும் சட்டத்தின்கீழ்அனைவரையும்சமமாகப் பாவித்தல் ஆகியவை எங்கள் இரு ஜன நாயக நாடுகளின் அடிப்படைக் கொள் கைகளாகும். இந்தியாவின்அரசமைப்பு மற்றும் ஜனநாயக விழுமியங்க ளுக்கு ஏற்ப தனது நாட்டின் மத சிறுபான்மை யினரின் உரிமைகளை பாதுகாக்க இந் தியாவை அமெரிக்கா வலியுறுத்து கிறது' என அவர் தெரிவித்தார். (ம)


ஓங்கி ஒலிக்கும் நினைவுகளுடன்
ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் மயில்வாகனம் சுந்தரலிங்கம்

(கிராம சேவையாளர் J/66, J/67)



அப்பா!
காலத்தின் சுழல்தனிலே காலனவன்
உமைப்பிடிக்க செய்வதறியா பாவிகளாய்
நாம் நின்றோம். காலத்தின் கோரமுகம்
மெதுமெதுவாய் எமைப்பார்க்க
வஞ்சித்த காலனவன் உமை விண்ணுலகம்
அழைத்தானோ?
அன்று தொலைத்த இன்பத்தை
இன்றுவரை
தேடுகிறோம் இடைநடுவில் அம்மாவையும்
தொலைத்துவிட்டோம்
கால ஓட்டம் தொடர்ந்து எமை இழுக்க
இன்று முத்திசையில் சிதறிக்கிடக்கின்றோம்
சிறகொடிந்த பறவைகளாய்
ஆயினும் நீர் காட்டிய பாதையில் கண்மூடி
நாம் செல்வோம் பயமேதும் எமக்கில்லை
நாம் நடக்கையில் எம் நிழலாய் நீர்
வருவீர் என நம்பி நகர்கின்றோம்
விடியலை நோக்கி...

என்றும் உங்கள்
நினைவுகளுடன்
பிள்ளைகள்.



31ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
30 . 04 . 1934

மறைவு
14 . 11 . 2019

அமரர் அன்னப்பிள்ளை வேலுப்பிள்ளை



அன்பின் இலக்கணமாய்
பண்பின் பிறப்பிடமாய் இறைவனின் மறுவுருவாய்
குடும்பத்தின் குலவிளக்காய் எண்ணத்தில் உயர்ந்தவராய்
மனதில் உத்தமியாய் வாழ்ந்த எங்கள்
குடும்பத்தின் ஒளிவிளக்கு மறைந்து
மாதம் ஒன்று ஆனதுவோ !
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
ஆறுமோ உங்கள் நினைவு அம்மா...

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.12.2019) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் (17.12.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பளை.

குடும்பத்தினர்.
021 221 5657

(CS29872)(14.17)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் திருமதி கந்தசாமி சுமணாவதி

அன்னை மடியில்
17.03.1950

ஐயப்பன் திருவடியில்
14.11.2019

திதி: தேய்பிறைத் துதியை (14.12.2019)

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'

எமது குடும்பத்தின் ஒளி விளக்கான அன்புத் தெய்வம்
அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

18/3, சபாபதி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

யங்கென்றிஸ் வி.க.



சென். நியூஸ்ரார் வி.க.



காளிஅம்பாள் வி.க.



அண்ணா வி.க.



# கால்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் நாளை

யாழ்ப்பாணம், டிசெ.14
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் நடத்தப்படும் நவரட்ணராஜா ஞாபகார்த்த தலைவர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 6 மணிக்கு இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெறவுள்ளது.

இதில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் யாழ். மாவட்ட மட்ட கால்பந்தாட்டத் தொடரீன் இறுதியாட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துணைவி சென். நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் வலிகாம மட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் அராலி அண்ணாவிளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து தாவடி காளிஅம்பாள்விளையாட்டுக்கழகஅணிமோதவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வா, சிறப்பு விருந்தினர்களாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதல்வர் அருட்தந்தை கொட்விறி ஜோயல், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பொதுச் செயலர் ஜஸ்வர் உமர், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிரதிச் செயலர் எ. அருளானந்தசோதி, இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பிராந்திய தலைவர் ஆர். புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

## கால்பந்தாட்ட தொடர் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.14
ஐ.ஓ.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா கால்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 'சரியான வெளிநாட்டு வழி வெற்றிக்கான வழி' எனும் தொனிப் பொருளில் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று, நாளை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

## புதிய பயிற்றுநர்களுக்கான கால்பந்தாட்ட பயிற்சிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பம்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் வடமராட்சி கல்வி வலயத்தில் அண்மையில் நியமனம் பெற்ற பயிற்றுநர்களுக்கான கால்பந்தாட்டம் தொடர்பான ஆரம்ப கட்ட பயிற்சி முகாம் இமையாணன் மத்திய விளையாட்டரங்கு, இமையாணன் அரசினர் தமிழ் காலவன் பாடசாலையிலும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

இவர்களுக்கான பயிற்சிகளை இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் பதில் தொழில்நுட்ப பணிப்பாளர் சமிந்த ஸ்ரெயின் வோல்ட்டர், மற்றும் இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் கால் பந்தாட்ட உதவி பயிற்றுநர் ராஜமாணிக்கம் தேவசாகயம் ஆகியோர் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். (23)




## பூப்பந்தாட்ட சுற்று போட்டி இன்று

யாழ்ப்பாணம், டிசெ.14
வவுனியா மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் பூப்பந்தாட்ட புதியவர்களுக்கான சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு வவுனியா நகர சபை பூப்பந்தாட்ட உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (23)

## மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம். டிசெ.14
வலிகாமம் கால்பந்தாட்டா லீக்கின் ஏற்பாட்டில் வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த தேசிய கால்பந்தாட்ட அணியில் விளையாடிய வீர, வீராங்கனைகள் மற்றும் 42ஆவது தேசிய கால்பந்தாட்டத் தொடரில் முதன்முறையாக வெற்றி பெற்ற வடக்கு மாகாண கால்பந்தாட்ட அணியினருக்கான மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை இரவு 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (23)

# இலங்கை - பாகிஸ்தான் தொடர் ரசிகர்கள் பெரும் ஏமாற்றம்



இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் 5.2 பந்துப்பரிமாற்றங்கள் மாத்திரமே வீசப்பட்ட நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது.

இலங்கை அணி முதல்நாள் முடிவில் மழை குறுக்கீ செய்ததால் 5 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுமுன்தின நாளிலும் இதே காலநிலைதான் காணப்பட்டது. இருந்தும் போட்டி ஆரம்பிக்கப்பட்டு 7.5 பந்துப்பரிமாற்றங்களில் மழை குறுக்கீடு செய்ததால் போட்டி இடைநிறுத்தப்பட்டு நீண்ட நேரங்களின் பின்னர் ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே மீண்டும் மழை குறுக்கிட்டதால் போட்டி நிறுத்தப்பட்டது. அப்போது இலங்கை அணி 6 இலக்குகளை இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது. தனஞ்செய 72 ஓட்டங்களுடனும், டில்ருவான் பெரேரா 2 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர்.

மூன்றரை மணித்தியாலங்கள் தாமதத்தின் பின்னர் நேற்று தொடர்ந்த மூன்றாம் நாள் ஆட்டம் 27 நிமிடங்கள் விளையாடப்பட்ட நிலையில் இடைநிறுத்தப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இருவரும் இணைந்து சிறப்பாக ஆட ஆரம்பித்தனர். ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே போதிய வெளிச்சம் இன்மையால் ஆட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இலங்கை அணி நேற்றைய நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது. தனஞ்சய டி சில்வா 87 ஓட்டங்களுடனும், டில்ருவன் பெரேரா 6 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.


இந்த டெஸ்ட் போட்டியின் முதல் மூன்று நாள்களில் 270 பந்துப் பரிமாற்றங்கள் வீசப்பட்டிருக்கவேண்டும். ஆனால் 91.5 பந்துப்பரிமாற்றங்களே வீசப்பட்டது.

மூன்றாம் நாள் ஆட்டம் காலை 10.45 மணியளவில் ஆரம்பிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருந்து. ஆனால், விரல்விட்டு எண்ணக்கூடிய மைதான உதவியாளர்களே பணியில் ஈடுபட்டுள்ளதாலும் ஆடுகளத்தையும், அதனைச் சூழவுள்ள பகுதியையும் மூடியிருந்த விரிப்புகளை அகற்றுவதற்கு மத்தியஸ்தர்கள் அனுமதி வழங்காததாலும் முதலாவது ஆட்ட நேரப்பகுதி முழுமையாக விளையாடப்படாமல் கைவிடப்பட்டது என்று நேரடி வர்ணனையாளர்கள் தெரிவித்தனர்.

பத்து வருடங்கங்களின் பின்னர் இடம்பெறும் இந்தப் போட்டி சுவாரஸ்யமில்லாமல் முடிவடையும் வாய்ப்பே காணப்படுகின்றது.




# ஸ்ராக்கின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறும் நியூசிலாந்து


ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான பகல்இரவு டெஸ்ட் போட்டி பேர்த்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி நேற்றைய நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது. லாபஸ் சாக்னே 110 ஓட்டங்களுடனும், டிராவிஸ் ஹெட் 20 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். இருவரும் பொறுப்புணர்ந்து சிறப்பாக ஆடினர். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த லாபஸ்சாக்னே போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். அவர் ஓர் ஆறு ஓட்டம், 18 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 143 ஓட்டங்களை விளாசியிருந்தார். ஹெட் அரைச் சதம் கடந்து சவுத்தியின் பந்து வீச்சில் நடையைக் கட்டினார். அடுத்து களமிறங்கிய டிம் பெய்ன், லாபஸ்சாக்னேயுடன் இணைந்து ஓரளவு நம்பிக்கை கொடுக்க ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. டிம் பெய்ன் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் களமிறங்கிய கம்மின்ஸ், ஸ்ராக் ஓரளவு ஓட்டங்களை எடுக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 416 ஓட்டங்களைக் குவித்தது.

பந்து வீச்சில் சவுத்தி, வாக்னர் 4 இலக்குகளையும், கிராண்ட்ஸ்ஹோம், ராவல் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு ஆஸிதிரேலிய பந்து வீச்சாளர்கள் ஆரம்பமே அதிர்ச்சியைக் கொடுத்தனர். அணி 2 ஓட்டங்களைப் பெற்ற போது 2 இலக்குகள் சரிக்கப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ராவல் 1 ஓட்டத்துடனும், லாதம் ஓட்டமெதனையும் பெறாதும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த அணித் தலைவர் வில்லியம்சன், ரெயிலர் இணை அணிக்கு ஓரளவு நம்பிக்கை கொடுத்தனர். வில்லியம்சனையும் 34 ஓட்டங்களுடன் பவிலியன் அனுப்பினார் ஸ்ராக். அடுத்துக் களமிறங்கிய நிக்கோலஸும் ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 7 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். பின்னர் வந்த வக்னெர் ஓட்டமெதனையும் பெறாது வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினார். மறுமுனையில் ரெயிலர் தனியொருவராகப் போராட ஆரம்பித்தார். அணி நேற்றைய நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. ரெயிலர் 66 ஓட்டங்களுடனும், வற்லிங் ஓட்டமெதனையும் பெறாது களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில் மிச்சல் ஸ்ராக் 4 இலக்குகளையும், ஹசில்வூட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

## தொடர் தோல்விகளை சந்திக்கும் பிவி சிந்து



உலக டூர் பூப்பந்தாட்டத்தில் இந்திய வீராங்கனை பி வி சிந்து 2ஆவது ஆட்டத்தில் சீன வீராங்கனை சென் யுஃபெயிடம் வீழ்ந்தார்.

உலகில் முதல் நிலை 8 வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்றுள்ள உலக டூர் இறுதி சுற்று பூப்பந்தாட்டச் சம்பியன்ஷிப் போட்டி சீனாவின் குவாங்ஜோவ் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

நடப்பு சாம்பியன் பிவி சிந்து முதல் ஆட்டத்தில் தோல்வியடைந்த நிலையில், இன்று நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் சீனாவின் சென் யு ஃபெய்ஐ எதிர்கொண்டார்.

இதில் முதல் செற்றை சிந்து 22:20 என்ற கணக்கில் கைப்பற்றினார். 2ஆவது செற்றை சென் 21:16 என்ற கணக்கில் கைப்பற்றினார். இறுதி சுற்று விறுவிறுப்பாக இருந்தது. இறுதிச் சுற்றை சென். 21:12 எனக் கைப்பற்ற சிந்து பரிதாக தோல்வியைச் சந்தித்தார்.

## முடிவை மாற்றிய பிராவோ



ரி-20 கிரிக்கெட்டில் சிறந்த வீரராக கருதப்படும் மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் பிராவோ மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டுக்குத் திரும்பியுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சு சகலதுறை ஆட்டக்காரர் பிராவோ தனது துல்லியமான பந்து வீச்சால் ரி-20 போட்டியில் புகழ் பெற்றார். அவர் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக அனைத்து வகை சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

சமீப காலமாக மேற்கிந்தியத்தீவுகள் அணி படுதோல்விகளை சந்தித்ததால், மூத்த வீரர்கள் மீண்டும் அணிக்கு திரும்பும் வகையில் விதிமுறையை மாற்றி அமைத்தது. இதனால் கிறிஸ் கெய்ல், பொல்லார்ட் போன்றோர் அணிக்குத் திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் ரி-20 அணிக்கு மீண்டும் திரும்புகிறேன் என்று பிராவோ நேற்று அறிவித்தார். அதேவேளையில் ரி-20 போட்டியைத் தவிர ஏனைய வகை கிரிக்கெட்டுக்காக மேற்கிந்தியத்தீவுகள் அணிக்காக விளையாடமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

இதுகுறித்து பிராவோ மேலும் தெரிவிக்கையில்;

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்காக மீண்டும் சர்வதேச ரி-20 போட்டிக்கு திரும்புவதை தெரிவிக்க விரும்புகிறேன். நான் தெரிவு செய்யப்பட்டால், ரி-20 போட்டிக்காக முழு வீச்சில் களம் இறங்குவேன். மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் இளைஞர்களுடன் விளையாடுவது உற்சாகமாக இருக்கும்-என்றார்.

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் பிரபல்யமான பான்சி மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு முகாமையாளர் தேவை.

தொடர்புகட்கு - 077 512 4756

## வேலைவாய்ப்பு

இலங்கை சுற்றுலாத்துறை அனுமதி பெற்ற கிளிநொச்சியில் இருக்கும் பிரபல்யமான ரெஸ்ருறண்ட் ஒன்றிற்கு விற்பனையாளர் தேவை. மேலதிக தகைமையாக கணக்கு தகைமை மற்றும் சிங்களம் தெரிந்திருத்தல் சிறந்தது.

தொடர்புகட்கு - 077 766 0396

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

021 222 8093 17, Kandy Road, Jaffna

## Techno World

(பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)

A/L 2022 தொழில்நுட்ப பிரிவு
விரைவில் ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

நவீன ஆய்வுகூட வசதிகளுடன் A/L 2022 மாணவர்களுக்கான அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - 077 017 5346, 077 170 3549

## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). வரவேற்பாளர்கள்
2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
3). விநியோக ஊழியர்கள் (இரவு, பகல்)

தகுதியானவர்கள் எதிர்வரும் 17.12.2019 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.
முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**உதயன் பணிமனை**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உடல் நிலை முன்னேறினாலும் உடனடியாக அணிக்கு திரும்பேன்

## ஹர்திக் பாண்டியா தெரிவிப்பு



இந்திய அணியின் வேகப்பந்து வீச்சு சகலதுறை ஆட்டக்காரர் ஹர்திக் பாண்டியாவுக்கு. முகுது வலியால் அவதிப்பட்டு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது அவர் உடல் நலம் தேறி வருகிறார். விரைவில் இந்திய அணிக்கு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில், அறுவைசிகிச்சைக்குப் பின் நன்றாக இருப்பதாக உணர்கிறேன். ஆனால், உடனடியாக கிரிக்கெட் விளையாட மாட்டேன் என்று பாண்டியா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

உண்மையை சொல்ல வேண்டுமென்றால், தற்போது மிகவும் நன்றாக இருப்பதாக உணர்கிறேன். காயத்தில் இருந்து மீண்டும் வருவதற்கான வேலை மிகவும் திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றன.

அறுவை சிகிச்சைக்குப் பின்னர் அணிக்கு திரும்புவது எளிதாக காரியம் அல்ல. அனைத்து வகையிலும் சரியாகி விட்டதா? என்பதை உறுதி செய்ய முயற்சி செய்கிறேன்.

உடல் அளவில் நான் எப்போது வேண்டுமென்றாலும் திரும்பலாம். ஆனால், மனதளவில் வலிமை பெறுவது முக்கியமானது. என்னுடைய வாழ்க்கையில் ஏராளமான விடயங்கள் நடந்துள்ளன. மனதளவில் நான் வலுவானவனாக மாறியுள்ளேன்.

அணிக்கு உடனடியாக திரும்புவதில் அவசரம் காட்டக்கூடாது. உங்களது உடல் தயாராகவில்லை என்றால், எந்தவித தயார் நிலையின்றி தற்போது நீங்களே உங்களை வலுக்கட்டாயமாக தள்ளினால், மீண்டும் இடைவெளிஏற்படவாய்ப்புள்ளது. காயம் எளிதானதல்ல ஆனால், பொறுமை முக்கியமானது. பேட் கம்மின்ஸ் காயத்துக்குப் பின்னர் மிகவும் வலிமையான வீரராக திரும்பியுள்ளதை பார்த்துள்ளேன். மூட்டு காயத்தில் இருந்து திரும்பிய பும்ரா தற்போது எப்படி விளையாடி வருகிறார் என்று பார்கிறோம்-என்றார்.

# இந்திய அணிக்கு கங்குலி பாராட்டு

மும்பையில் நடைபெற்ற இறுதி ரி-20 சர்வதேச போட்டியில் இந்திய அணி 2:1என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இந்திய அணி வீரர்களான ரோகித், கோக்லி, ராகுல் மூவரும் இணைந்து அணியை இமாலய ஓட்டங்களை எட்ட வைத்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடும் போது இதற்கு முன்பாக இந்திய அணி தயங்கும்.

ஆனால் மூன்றாவது ரி-20 போட்டியின் முதல் பந்திலிருந்து இறுதிப் பந்து வரை அடித்தாடியதைக் காண முடிந்தது. இந்த பயமற்ற அணுகுமுறையை பிசிசிஐ தலைவர் கங்குலி பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்தாவது:

இந்திய அணி ரி-20 தொடரை இழந்து விடும் என்று எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை. எனவே வெற்றி என்பது ஆச்சரியமானதல்ல. ரி-20 கிரிக்கெட்டில் இப்போதெல்லாம் இப்படித்தான் அச்சமின்றி அடித்து ஆடுகின்றனர், அதைத்தான் இந்திய அணியும் செய்தது. அச்சமின்றி விளையாடு. யாரும் இப்போது இந்திய அணியில் தங்கள் இடத்தைத் தக்க வைக்க ஆடவில்லை. வெற்றி பெறவே ஆடுகின்றனர் - என்றார்.





# முரளி விஜய்க்கு தண்டம்

இந்தியாவில் நடைபெற்று வரும் கர்நாடகாவுக்கு எதிரான போட்டியில் நடுவரிடம் வாக்குவாதம் செய்த முரளி விஜய்க்கு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. ரஞ்சி டிராபி தொடரின் முதல் சுற்று ஆட்டத்தில் தமிழ்நாடு கர்நாடகா அணிகள் விளையாடி வருகின்றன.

நேற்றுமுன்தின முதல்நாள் ஆட்டத்தில் கர்நாடகா அணி துடுப்பெடுத் தாடிக் கொண்டிருக்கும்போது, அந்த அணியின் பவண் தேஷ்பாண்டே அடித்த பந்தை இலக்குக் காப்பாளர் என்,ஜெகதீசன் பிடியெடுத் தார்.

பந்து வீச்சாளர் அஸ்வின் உள்பட தமிழக வீரர்கள் அனைவரும் நடுவரிடம் ஆட்டமிழப்பைக் கோரினர். ஆனால், நடுவர் ஆட்டமிழப்பை கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் கோபம் அடைந்த தமிழ்நாடு வீரர்கள் ஆடுகளத்தை முற்றுகை யிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். முரளி விஜயை நடுவர் சமாதானம் செய்தார்.

இந்த நிலையில் வீரர்களின் நன்னடத்தையை மீறும் வகையில் செயற்பட்ட முரளி விஜய்க்கு போட்டியின் ஊதியத்திலிருந்து 10 சதவிகிதம் தண்டம் விதிக்கப்பட்டது.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.